பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 06 ஞாயிற்றுக்கிழமை (18-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:83

### புலிகளைப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்ப்பதா?

# பிரிட்டிஷ் தூதரகத்தில் மகஜர்கள் குவிகின்றன!

## தடையை ஆதரித்தும் எதிர்த்தும் கட்டுக் கட்டாகக் கடிதங்கள்

கொழும்பு,பெப்ரவரி18

**பிரிட்டனில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாளை நடைமுறைக்கு வர இருக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்ப்பதா என்ற விவகாரம் தொடர்பாகக் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கு மகஜர்கள் வந்து குவிந்தவண்ணம் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.**

பிரிட்டன் தனது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் புலிகள் இயகத்தை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்து, அந்த இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டும் என்று கோரும் மகஜர்களை - பெரும்பாலும் - பெரும்பான்மைச் சிங்களவர்கள், சிங்களத் தீவிரப்போக்குடையவர்களும் -

புலிகள் இயக்கத்தைத் தடை செய்யக் கூடாது என்பதற்கான பல்வேறு காரணங்களை விளக்கி தமிழர்களும் -

கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகத்துக்குத் தினசரி மகஜர்களை அனுப்பி வருகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளைத் தடைசெய்வதற்கு எதிரான

## யாழ்.பல்கலை மாணவர்களின் மகஜரில் மகேஸ்வரன் ஒப்பம்!

யாழ்ப்பாணம்,பெப்.18

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யக் கூடாது என்று கோரி பிரிட்டிஷ் அரசிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் மகஜரில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்று ஒப்பமிட்டார்.

மேற்படி மகஜரில் பொதுமக்களின் கையொப்பத்தைப் பெறும் வேட்டையை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தனர் என்பது தெரிந்ததே.

இந்த மகஜரில் பொதுமக்கள் கையொப்பமிடுவதற்கு வசதியாக யாழ்.மருத்துவபீடப் பகுதியிலும் கருமபீடம் ஒன்றைப் பல்கலைக் கழக மாணவர்கள் திறந்துள்ளனர்.

தமது மெய்ப்பாதுகாவலர்களான பொலீஸார் சகிதம் தமது வாகனத்தில் மருத்துவபீடப் பகுதிக்குச் சென்ற மகேஸ்வரன் எம்.பி. அங்குள்ள மேற்படி கருமபீடத்துக்குச் சென்று மகஜரில் தமது ஒப்பத்தை இட்டார். (உ)

### புலிகளைத் தடை செய்யவேண்டாம் எனக் கோரும்

## மகஜரில் ஒப்பம் பெற்ற 3 மாணவர் 5 மணி நேரம் விசாரிக்கப்பட்டனர்

### பின்னர் கடும் எச்சரிக்கையுடன் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

புலிகள் அமைப்பைத் தடை செய்யவேண்டாம் என பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கோரும் வகையில் வடமராட்சி - உடுப்பிட்டிப் பகுதியில் நேற்றுக் காலை கையெழுத்து வேட்டையில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் 3 பேர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு 5மணி நேரம் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் எனத் தெரியவந்தது.

அத்துடன் மேற்படி மாணவர்களிடம் இருந்த 10 ஆயிரம் பொதுமக்களின் கையொப்பங்கள் அடங்கிய பிரதிகளை படையினர் பறிமுதல் செய்து விட்டனர் எனவும் - தெரியவந்தது.

உடுப்பிட்டிப் பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட மேற்படி 3 மாணவர்களும் வல்வெட்டித

(16ஆம் பக்கம் பார்க்க)

### படையினர் ஒலிபெருக்கியில் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

பல்கலைக்கழக மாணவர்களின் கையெழுத்து சேகரிக்கும் மகஜரில் ஒப்பமிட வேண்டாம் என்று பொதுமக்களைக் கோரும் அறிவிப்பு நேற்று படையினரால் விடுக்கப்பட்டது.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனத்தில் வந்த படையினர் யாழ். நகரப்பகுதியில் இந்தப் பகிரங்க அறிவிப்பை விடுத்தனர்.

### கிழக்கிலும் மகஜர்கள் பறிப்பு

மட்டக்களப்பு,பெப்.18

விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்யவேண்டாம் என்று பிரிட்டனைக் கோரி 10 ஆயிரம்பேர் கையெழுத்திட்ட மகஜர் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து நேற்றுப் படையினரால் பறித்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

வந்தாறுமூலையிலுள்ள கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு முன்பாக நின்று மாணவர்கள் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டபோது அங்கு வந்த படையினர் கையெழுத்து பெறப்பட்ட பட்டியல்களைப் பறித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

### புலிகளைத் தடை செய்யவேண்டாம்

## ஐரோப்பிய தூதுக் குழுவிடம் தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தும்

கொழும்பு,பெப்.18

விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்யக்கூடாது என்று இன்று கொழும்பு வரும் ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழுவிடம் - தமிழ்க்கட்சிகள் கூட்டாக வலியுறுத்த உள்ளன.

ஐரோப்பியத் தூதுக்குழுவினர் தமது கொழும்பு விஜயத்தின் போது தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளையும் சந்திக்க உள்ளனர்.

விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடைசெய்யக் கூடாது என்ற கோரிக்கையை தூதுக் குழுவினரிடம் கூட்டாக முன்வைக்க உள்ளதாக பத்து தமிழ்க்கட்சிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க

## திடீர்த் தாக்குதலை தடுப்பது எப்படி? கொழும்பில் நேற்று பெரும் ஒத்திகை!

கொழும்பு,பெப்.18

தலைநகர் கொழும்பில் நடத்தப்படும் திடீர்த் தாக்குதல்களை எதிர்கொண்டு முறியடிப்பது எவ்வாறு என்பது தொடர்பான பாதுகாப்பு ஒத்திகை நேற்று கொழும்பு கோட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான இந்த ஒத்திகை நடவடிக்கை சிலமணி நேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

திடீர் குண்டு வெடிப்புகள் நடக்கும் போது அவற்றை எதிர்கொண்டு சமாளிப்பது, குண்டு வெடிப்புச் சூத்திரதாரிகள் அப்பகுதியை விட்டுத் தப்பிச் செல்ல முடியாது சுற்றி வளைப்பது, குண்டு வெடிப்புக்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று நடந்த சமாதானப் பேரணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.18

போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துமாறு வலியுறுத்தி வவுனியா,மன்னார்,முருங்கன்,மடு போன்ற இடங்களில் நேற்று சமாதானப் பேரணிகள் நடத்தப்பட்டன.

சர்வமத அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணிகளில் சமயத்தலைவர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு

வடமராட்சி,பெப்.18

மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 20 நிமிட நேரம் அப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

(ம-173-118-117)

### வத்தளையில் 17தமிழ் இளைஞர் கைது

கொழும்பு,பெப்.18

கொழும்பு.வத்தளை மற்றும் பேலியகொட பிரதேசம் நேற்றுக் காலை முதல் பொலீஸாராலும் படையினராலும் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தத் தேடுதல்களின் போது 17 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (ம)

### கோண்டாவில் பகுதியில்

## பற்றைக்குள் கிடந்த சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.18

கைகளும் கண்களும் கட்டப்பட்டு, கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள பற்றைக் காணிக்குள் காணப்பட்ட சடலம் நேற்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

யாழ்.கன்னாதிட்டிப் பகுதியைச் சேர்ந்த குற்றாலன் முரளிதரன் (வயது23) என்பவரது சடலமே அது என உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

நேற்றுக் காலை சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலீஸார் சடலத்தை மீட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-10-6)

## கொக்குவில் சூட்டுச் சம்பவம்; சடலம் இனங்காணப்பட்டது

கொழும்பு,பெப்.18

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

இறந்தவர் தனது தம்பியாரான யாழ்.மானிப்பாய் வீதியைச் சேர்ந்த சேதுநாதன் காண்டீபன் என்பவரே என்று அவரது சகோதரன் சடலத்தை நேற்று மாலை அடையாளம் காட்டினார்.

சடலம் இன்று உறவினர்களிடம் கையளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

இச்சம்பவம் தொடர்பாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் -

கொக்குவில் பகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது சுட்டுவிட்டுத் தப்பியோடிய விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரைக் கொன்றதாகவும்-

அவரிடமிருந்து பிஸ்டல், நான்கு சுற்று ரவைகள் மற்றும் சைக்கிள் என்பவற்றை மீட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-6)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அழியாத நினைவில் ஆறாம் மாதம்

எமக்காக...
01
-
03
-
1943



தெய்வமாக...
18
-
08
-
2000

## அமரர் நாகசுந்தரம் ஏகாம்பரம் செட்டியார்

(கல்வியங்காடு விக்னேஸ்வரா களஞ்சியம், விநாயகர் அரைக்கும் ஆலை மற்றும் முன்னாள் குகன் ரயர் வேக்ஸ் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளரும் ஸ்தாபகரும்)

அப்பா!
நீங்கள் எமக்கு வழிகாட்ட -
நாங்கள் உங்கள் வழி நடக்க -
எப்போதும் நீங்கள் எங்களுடன்.
எங்களுக்குள் பிரிவே இல்லை!

*82,செல்லர் வீதி,*
*நல்லூர்.* (C/15365) - குடும்பத்தினர்.

## அவசர ஒன்றுகூடல்

யாழ். பல்கலைக்கழக 2ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான, கலைப்பீட மாணவர் ஒன்றியத்துக்கான புதிய உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல் தொடர்பான அவசர ஒன்றுகூடல் எதிர்வரும் செவ்வாய் (20.02.2001) மாலை 3.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. அனைவரும் சிரமம் கருதாது தவறாது கலந்து கொள்ளவும்.

(84298) 2ஆம் வருட மாணவ பிரதிநிதி.

## மாதாந்த உதவிப்பணம்

பளைப் பிரதேசசெயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவுகள் சனிக்கிழமை முதல் வடமராட்சியில் உள்ளவர்களுக்கு பளை, முகமாலை, இயக்கச்சி அஞ்சல் அலுவலகங்களிலும்-

வலிகாமம் பகுதியில் தங்கியுள்ளவர்களுக்கு மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்திலும் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச செயலர் சு.புத்தி சிகாமணி அறிவித்துள்ளார். (க-117)


லஷ்சுமி இணுவில்
இறுதி வாரமாக
பிரசாந்த், லைலா, வையாபுரி நடித்த
பார்த்தேன் ரசித்தேன்
(றீல்ஸ்) காட்சிகள்:11.00, 2.30(பு.நே.)
21.02.2001 முதல்
உன்னைக்கொடு என்னைத் தருவேன்
(84326)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரபுதேவா-சரத்குமார் ஜெயாசீல் நடித்த
பெண்ணின் மனதைத்தொட்டு
(றீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
21.02.2001 முதல்
காதலர் தினம்
(C/15367)

ராஜா யாழ்ப்பாணம்
கார்த்திக், திவ்யாஉன்னி, ரஞ்சித், மந்த்ரா மற்றும் பலர் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
கண்ணன் வருவான்
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C/15311)


## சமாதானம் வேண்டிப் பிரார்த்தனை

குருநகர்பெப்.18

நாட்டில் சமாதானம் ஏற்படவும் நீதியோடு கூடிய உரிமைகள் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவும் வேண்டி யாழ்.மரியன்னை பேராலயத்தில் நேற்று மாலை 4.30 மணிக்கு பஜனை வழிபாடு நடத்தப்பட்டது.

யாழ்மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கம் ஏற்பாடு செய்த இவ்வழிபாட்டை அருட்திரு எஸ்.றெக்ஸ் கோன்ஸ்ரன்ரைன் அடிகளார் தலைமை வகித்து நடத்தினார்.

மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான வழிபாடு மாலை 6 மணிவரை இடம்பெற்றது.

பேராலயத்தின் வாயிலில் வெள்ளை ஆடை அணிந்து காத்திருந்த சிறுவர்கள் வழிபாட்டுக்கு வந்தவர்களுக்கு வெள்ளை நிற மலர்களை வழங்கினார்கள். பெருமளவு மக்கள் இப்பஜனை வழிபாட்டில் கலந்து கொண்டார்கள். (ம-51)

# நன்றி நவிலல்



1960 ஆம் ஆண்டு தொடக்கம் பல அரசினர் வைத்தியசாலைகளில் வைத்திய ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளராகப் பணிபுரிந்து 1988 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட குழந்தை மருத்துவப் பிரிவில் தொழில் நுட்பவியலாளராக நிரந்தர நியமனம் பெற்று ஈற்றில் 1996 ஆம் ஆண்டிலிருந்து ஆய்வுகூட பதவி நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்ற தெல்லிப்பழையைச் சேர்ந்த

## திரு. கதிரவேற்பிள்ளை சிவானந்தம்


2001-02-13 தொடக்கம் அரச சேவையிலிருந்தும் யாழ்.பல்கலைக்கழக சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடமை புரிந்த காலப்பகுதியில் அவருக்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை,யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ். பல்கலைக்கழகம், யாழ்.மருத்துவபீடம், யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள மருத்துவபீடப் பிரிவுகள், யாழ்.பேர்தனா வைத்தியசாலை ஆகிய நிறுவனங்களைச் சார்ந்த பொறுப்பதிகாரிகளுக்கும், வைத்திய நிபுணர்களுக்கும், வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய சகல உத்தியோத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் அன்புள்ளத்துடன் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றார்.

(C/15363)

# சாமியே சரணம் ஐயப்பா!





தாவடி, மானிப்பாய் வீதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு அருகில் அமைந்த ஐயப்ப பக்தன் அ.இந்துதாஸன் இல்லத்தில் கடந்த டிசெம்பர் 16ஆம் திகதி(16.12.2000) நடைபெற்ற ஐயப்ப பூசையில் கலந்து கொண்ட பக்தர்களால் கொடுக்கப்பட்ட காணிக்கை மூலம் வடிவமைக்கப்பெற்ற 'தங்கக்கிரீடம்' இந்தியாவில் கேரள நாட்டில் அமைந்த பந்தளத்தில் ஐயப்பனை வளர்த்த ராஜபரம்பரையிடம் ஐயப்ப பக்தனாகிய அ.இந்துதாஸனால் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். மேலும் 18ஆம் வருட பூசையில் கலந்து காணிக்கை கொடுத்தவர்கள், விபூதிப்பிரசாதத்தை எமது இல்லத்தில் பெற்றுக்கொள்ளவும்.



கிரீடம் இராச பரம்பரையிடம் ஒப்படைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

*தாவடி மானிப்பாய் வீதி.* (C/15356)

தகவல்:
ஐயப்ப பக்தன் அ.இந்துதாஸன்.

உதயன்

## சமாதானப் பிரார்த்தனை

இலங்கையில் அமைதியும் சமாதானமும் குலைந்து இரண்டுதசாப்தங்களாகின்றன. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் வாழ்க்கையில் நிம்மதியும் இயல்புத் தன்மையும் தொலைந்து இருபது வருடங்களுக்கு மேலாகின்றன.

இந்த நிலைமைக்குக் காரணம், இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்குத் தவறியதே ஆகும். தமிழர்களும் இந்த நாட்டின் சம உரிமை உள்ள மக்களே என்று மதித்து அவர்களுக்குரியவற்றை வழங்குவதற்குப் பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் தவறினர்.

நாட்டில் அமைதியும் சமாதானமும் மீண்டும் உருவாக வேண்டும் என்ற உள்ளார்ந்த விருப்பம் இந்தரப்பு மக்களிடையேயும் பெருமளவில் உண்டு. தென்னிலங்கையின் அரசியல் தலைவர்களின் ஆட்சி அதிகார, ஆட்சி லாப நோக்குடனான போக்கும், பேரினவாத விச்சின் செல்வாக்கினால் அவர்கள் ஆட்கொள்ளப்பட்ட தன்மையுமே பெரும்பாலான மக்களின் அமைதி விருப்பத்துக்குக் குந்தகமாக — தடையாக — இருந்தது; இப்போதும் உள்ளது.

இலங்கையில் ஜனநாயகம் என்பது பெரும்பான்மை இனத்தவரின் ஆட்சியும் ஆதிக்கமும் என்றாகிவிட்டதால் அமைதியைக் காண்பதற்கு தேடுதல் நடத்த வேண்டிய துரதிர்ஷ்டம் தமிழர்களை மட்டுமன்றி, சிங்களவர்களையும் பிடித்திருக்கிறது.

மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக உள்ளவை சமயங்கள். அவை வாழ்க்கை நெறிகளை அந்தந்தச் சமய மக்களுக்குப் புகட்டுகின்றன. அன்பு, சாந்தி — அமைதி, சமாதானம், சகோதரத்துவம், சக வாழ்வு, புரிந்துணர்வு ஆகிய அறங்களை எல்லாச் சமயங்களும் வலியுறுத்துகின்றன,

அரசியல் பிழைத்துள்ள இலங்கையில் மக்களுக்கு ஆறுதல் அளிப்பதோடு அவர்களிடம் மனமாற்றத்தை உருவாக்கும் அளப்பரிய சக்தியும் சமயங்களுக்கு உண்டு.

அந்த வகையில் மடுமாதா சொரூபத்தை தென்னிலங்கையில் சமாதானப் பவனியாக எடுத்துச்செல்லும் கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் பணி, புதிய முயற்சியாகும். அத்துடன் தேவாலயங்களில் ஞாயிற்றுக்கிழமைப் பூசையின் போது சமாதானத்துக்காகச் செபிக்கும் திட்டமும் நடைமுறையாகிறது.

இதே போன்று, சிவராத்திரி தினத்தை சமாதானப் பிரார்த்தனை நாளாக இந்து சமயப் பேரவை பிரகடனம் செய்துள்ளமையும் வரவேற்கத் தக்கதாகும். அகில இலங்கை ரீதியாக இந்து மக்கள் சிவராத்திரி நாளில் சமாதானம் வேண்டிப் பிரார்த்திப்பது நல்ல பயன்தரும்.

கிறிஸ்தவ, இந்து சமய மக்களைப் போன்று பௌத்த மக்களையும் சமாதானப் பிரார்த்தனைகளில் ஈடுபட ஊக்குவிப்பது அவசியம். தென்னிலங்கையில் உள்ள சமாதானத்தை நாடும் பௌத்த அமைப்புகள் இது விடயத்தில் அக்கறை கொள்வது நற்பயன் தரும். பௌத்த சமயத்தவர்கள் எல்லோரும், பௌத்த பிக்குகள் சகலரும் பேரினவாதப் போக்குடையவர்கள், சமாதானத்தில் நாட்டமற்றவர்கள் என்ற நிலையை நீக்குவதற்கு மேற்படி தரப்பினர் உழைக்காவிடில் எதிர்பார்க்கும் அமைதி வெறும் பேச்சாகவே முடியும்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு 4 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள்

## கொழும்பு லயன்ஸ் கழகம் அன்பளிப்பு

கொழும்பு, பெப். 18

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சிறுநீரக நோயாளர்களுக்குப் பயன்படுத்தப்படும் இரத்தச்சுத்திகரிப்பு இயந்திரங்களை லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ அன்பளிப்புச் செய்யவுள்ளது. இவ்வகையான நான்கு இயந்திரங்கள் விரைவில் அங்கு அனுப்பி வைக்கப்படும் என்று கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண ஆயர் அதிவந் தோமஸ் சௌந்தரநாயகம் எடுத்த முயற்சியினால் இந்த நான்கு சிறுநீரக இயந்திரங்களும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு வழங்கப்படுகின்றன.

இந்த இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்படுவதை லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 ஏ ஆளுநர் பிரஸில் பெர்னாண்டோ அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவில் உள்ள லயன்ஸ்கழகம் 6 கோடி ரூபா பெறுமதி மிக்க 30 இயந்திரங்களை இலங்கை லயன்ஸ் கழகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

இவற்றில் நான்கு இயந்திரங்களையே லயன்ஸ் கழகம் 306 ஏ, யாழ் வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

சிறுநீரக கோளாறு காரணமாக அவஸ்தைப்படும் நோயாளிகளுக்கு இரத்தத்தை சுத்திகரிப்பதற்கு இந்த இயந்திரங்கள் உதவுகின்றன.

யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு இவை வழங்கப்படுவதன் மூலம் வடபகுதியிலுள்ள சிறுநீரக நோயாளர்கள் வைத்தியத்திற்காக கொழும்பு வரும் நிலையைத் தவிர்க்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க)

## நாச்சியம்மையார் நினைவு நிகழ்வு

வலிகாமம் தெற்கு, பெப். 18

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரின் ஆதரவில் புண்ணிய நாச்சியம்மையார் தினம் நாளை திங்கட்கிழமை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சைவ பரிபாலன சபைத் தலைவர் இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் கலந்து கொள்வார்.

காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் அருளுரை நிகழ்த்துவார். பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும், தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

(க-152)

## மாமியாரைக் கடித்துக் குதறி இம்சைப்படுத்திய மருமகன்!

### மிருசுவில் பகுதியில் கொடூரம்

தென்மராட்சி, பெப். 18

மது போதையில் வந்த மருமகன் வீட்டுக்குள் படுத்திருந்த மாமியை உலக்கையால் அடித்து படுகாயப்படுத்தி உள்ளார். அத்துடன் அவரின் மார்புப் பகுதி, தோள், கை, முதுகு ஆகிய பகுதிகளைக் கடித்துக் குதறியும், பீடி நெருப்பினால் உடம்பில் தீக்காயங்களையும் ஏற்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு மிருசுவில் தவசிகுளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

காயங்களுக்கு உள்ளான அதே இடத்தைச் சேர்ந்த யோசப் பத்திமா திரேசா (வயது 47) என்பவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மது அருந்தப்பணம்கொடுக்காததால் ஆத்திரமடைந்தே மருமகன் இந்தச் கொடுமையைச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பெண் கடந்த வருடமும் மருமகனால் இதே போன்ற உலக்கையால் தாக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## விவசாய பயிற்சி வகுப்பு

சுன்னாகம், பெப். 18

சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை10 மணிக்கு விவசாயப் பயிற்சி வகுப்பும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன.

இவ் வகுப்பில் மிளகாய், வெங்காயப் பயிர்களுக்குத் தனிப்பசளைப் பாவனையின் நோக்கமும் முக்கியத்துவமும், மிளகாய் நோய், பீடைக் கட்டுப்பாடு, இரசாயனப் பாவனையை மட்டுப்படுத்தி தாவர பீடை நாசனியைப் பாவித்தல் என்பன தொடர்பாகக் கலந்துரையாடப்படும்.

தென்னைப் பீடைக் கட்டுப்பாடு சம்பந்தமாக தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் படக்காட்சியுடனான செய்முறை விளக்கம் அளிப்பார் என விவசாயப் போதனாசிரியர் திருமதி ஜெ. சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(ஐ—27)

## தெங்குச் செய்கையாளருக்கு நஷ்டஈடு வழங்க ஏற்பாடு

தென்மராட்சி, பெப். 18

பளைப் பிரதேசத்தில் தென்னை உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு பச்சிலைப்பள்ளி தெங்கு செய்கையாளர் சங்கம் நிவாரணம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தென்னை உற்பத்தியில் ஈடுபட்டவர்களின் விவரங்கள் சங்கத்தினால் திரட்டப்படுவதால் பிரதேசத்தில் நிரந்தர வதிவிடமாகக் கொண்ட தெங்குச் செய்கையாளர்கள் பின்வரும் இடங்களில் தமது விவரங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு சங்கத் தலைவர் எஸ். காசிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

வலிகாமம் பகுதியில் தங்கியுள்ளவர்கள் யாழ்ப்பாணம்— மானிப்பாய் வீதியில் உள்ள பளைப் பிரதேச நிலையத்திலும் —

வடமராட்சிப் பகுதியில் தங்கியுள்ளவர்கள் கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் இயங்கும் கிளாலி உப அஞ்சல் அலுவலகத்திலும் —

விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## வணிகர் கழக கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், பெப். 18

நுணாவில், மட்டுவில், சரசாலை வணிகர் கழகத்தின் பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவில் மேற்கு ஈசன் கல்வி நிலையத்தில் நடைபெறும் என்று சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் செ. நித்தியானந்தன் நேற்றுத் தெரிவித்தார்.

(க—10)

### உதயவாக்கு

பலமுள்ளவனாக இருக்க விரும்பினால், உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்துகொள்

## நீதிமன்ற நிபந்தனையை மீறிய பிணையாளிக்கு 4 மாதச் சிறை

தென்மராட்சி, பெப். 18

நீதிமன்ற நிபந்தனையை பொறுப்புடன் செயற்படுத்தாத பிணையாளி ஒருவருக்கு நான்குமாதச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் இந்தத் தண்டனை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் கொடிகாமம் பொலிஸாரால் தொடரப்பட்ட திருட்டு வழக்கு ஒன்றில் சந்தேக நபரைப் பிணையில் பொறுப்பேற்ற நபர், நீதிமன்ற நிபந்தனையைப் பொருட்படுத்தாமல் சந்தேக நபருக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளார். அதை அடுத்து பிணையாளி நீதிமன்றுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வரவழைக்கப்பட்டிருந்தார். ஏற்கனவே நீதிமன்றினால் வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையை ரொக்கமாகச் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. எனினும் பிணையாளி அந்தத்தொகையைச் செலுத்தத் தவறியதால் நான்கு மாதச் சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது.

இந்த வழக்கின் சந்தேக நபருக்கு நீதிமன்ற நிபந்தனையை மீறியமைக்காக மூன்று மாதச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

(க-117)

### நாளை

மாசி 7

திங்கட்கிழமை

திதி: துவாதசி முழுவதும்

நட்சத்திரம்: பூராடம் முன் இரவு 10. 07 வரை.

சுபநேரம்: 12.32—0.02

ராகுகாலம்: 8 03—9 32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## மீண்டும் இயங்குகிறது

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க வளவில் குருநகர் மீன்வாடி கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

(ம-51)

## சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு உபகரணங்கள்

யாழ். போதனா வைத்தியசாலையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கண் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கான நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கடந்த 15 ஆம் திகதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் எடுத்து வரப்பட்டன.

தற்பொழுது இந்த உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைப் பொருத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இந்த உபகரணங்கள் யாழ். லயன்ஸ் கழகத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது தெரிந்ததே. (ம-5-139-15)

## விளையாட்டு நிகழ்வுகள்

சங்கானைக் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மைதானத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக வலி. மேற்கு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் என். குகராசா கலந்து கொள்வார். (க-28)

★ ★ ★

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் இன்று ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

(க-86)

★ ★ ★

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் கா. நடராசா தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் கலந்து கொள்வார். (க-28)

★ ★ ★

பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்வி பொ. கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சங்கானை அரசினர் வைத்தியசாலை டாக்டர் திருமதி க. சிவகுமாரனும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கமும் கலந்துகொள்வர். (க-28-135)

★ ★ ★

ஆனைப்பந்தி மெ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ். சோமேஸ்வரபிள்ளை தலைமையில் நடைபெறும். யாழ். பல்கலைக்கழக வர்த்தகத் துறைத் தலைவர் கலாநிதி க. தேவராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(ம-51)

# ஆசிரியர், கல்வி வலய ஊழியருக்கு

# சம்பள முற்பணம், விழா முற்பணம்

குருநகர், பெப். 18

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர் மற்றும் கல்விசாரா நிரந்தர அலுவலர்களுக்கு விசேட சம்பள முற்பணம் ஆயிரம் ரூபாவும் விழா முற்பணம் இரண்டாயிரம் ரூபாவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயத்தின் கணக்காளர் கே. ஆர். துரைசிங்கம் யாழ். கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விசேட முற்பணம் இம்மாதம் இறுதிக்குள்ளும் விழா முற்பணம் மார்ச் மாதச் சம்பளத்துடனும் சேர்த்து வழங்கப்படும். விசேட முற்பணத்துக்கு வட்டி அறவிடப்படும். பயிலுநர், ஆசிரியர், பட்டதாரிப் பயிலுநர், நிவாரண அமைய அடிப்படையில் சேவை புரிபவர்கள் இவ் விசேட முற்பணத்தைப்பெற்றுக்கொள்ளத் தகைமை அற்றவர்கள் எனவும், விழா முற்பணத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பயிலுநர், ஆசிரியர்கள், பட்டதாரிப் பயிலுநர் அமைய நிவாரண ஊழியர் ஆகியோர் நிரந்தர சேவையாளர் ஒருவரைப் பிணையாளராகச் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசேட முற்பணத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களின் பெயர் விவரங்களை 20-2-2001 க்கு முன்னரும் விழா முற்பணத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களின் பெயர் விவரங்களை மார்ச் மாத சம்பளப் பத்திரத்துடனும் இணைத்து யாழ். கல்வி வலயத்தில் சேர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுள்ளார்.

(ஐ–51)

## படையினர் பறிமுதல் செய்த படகுகள், மீன்பிடி வலைகள்

### குருநகர் மீனவர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 18

குருநகர் மீனவர்களிடமிருந்து கடற்படையினரால் கடந்த 10 ஆம் திகதி பறிமுதல்செய்யப்பட்ட படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள், மீனவர்அனுமதிப்பத்திரங்கள் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை.

மண்டைதீவுக்கும் வெளிச்சவீட்டைக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 35 மீனவர்களின் 8வள்ளங்கள், 5லட்சம் ரூப பெறுமதியான வலைகள் போன்றன படையினரால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன

இச்சம்பவம் தொடர்பாக ஈ. பி. டி. பி. அமைப்பிடம் கடற்றொழிலாளர் சங்கத்தினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க—5)

## மாணவர்களுக்கு இன்று மூக்குக்கண்ணாடிகள்விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 18

இணுவில் மத்திய கல்லூரியில் கடந்த டிசெம்பர் மாதம் நடத்தப்பட்ட மருத்துவ முகாமின் போது மூக்குக்கண்ணாடி வழங்குவதற்கென சிபார்சு செய்யப்பட்ட மாணவர்களில் மற்றொரு தொகுதியினருக்கு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன

இது தொடர்பான நிகழ்வு ஒன்று இன்று காலை 9 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மூக்குக் கண்ணாடிகளை வழங்குவார்.

இன்று மூக்குக்கண்ணாடிகளைப் பெறவுள்ள மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

க. பாலகுமார் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்.), ச. சிந்துஜா (கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்.), செ. பாமினி (கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்.), அ சுபாசினி (மல்லாகம் ம. ம. வி.).

செ. சயூபனா (புத்தகலட்டி சிறிவிஷ்ணு வித்.), உ.சாளினி (சித்தன்கேணி கணேஸ் வித்.), ம. சன்சியா (தாவடி இந்து த. க. பாட.), யோ. கஜேந்திரன் (கந்தர்மடம், சைவப்பிரகாச வித்.), ச. சுகந்தினி (வயாவிளான் மத்திய கல்லூரி).

அ பூ. நிரோஜினி (மானிப்பாய் சென்,ஆன்ஸ்), ம. மல்லிகா (மானிப்பாய் சென். ஆன்ஸ் பாடசாலை), ந. ஜீவிதா (தம்பாட்டி அ. த. க.பா.), யோ. நிரஞ்சினி (தம்பாட்டி அ. த க பா.), து. சோபிதா (கோண்டாவில் ம. ம. வித்.).

மேற்படி மருத்துவ முகாமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அறநிதிய சபையின் அனுசரணையுடன் இணுவில்,மானிப்பாய் மற்றும் சுன்னாகம் லயன்ஸ் கழகங்கள் ஏற்பாடு செய்திருந்தன.

(க-7-10)

### அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக் கழக உடற்கல்வித்துறை 1 ஆம், 2 ஆம் வருட மாணவர்கள் அனைவரையும் இன்று காலை 10. 00 மணியளவில் உடற்கல்வித்துறை விரிவுரை மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

– தலைவர்.

உடற்கல்வி மாணவர் மன்றம்,
உடற்கல்வித்துறை,
யாழ். பல்கலைக் கழகம். (84313)

### கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
செல்வி தயாரஞ்சினி சிவகுருநாதன்
அவர்களின் அன்புச் சகோதரன்

**சிவகுருநாதன் சிவரூபன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர், அலுவலக
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். [84314]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 18

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர்கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

(க—3)

## பளை மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு 5 தேங்காய்கள்

தென்மராட்சி, பெப். 18

எழுதுமட்டுவாழ் கரம்பகம் தென்னந் தோட்டத்திலிருந்து அண்மையில் கொண்டு வரப்பட்ட தேங்காய்களைப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள பளைப் பிரதேச மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கப் பளைப்பகுதி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் பொறுப்பதிகாரி சு. தவரத்தினசிங்கம் இணக்கம் தெரிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை புலோலி பொது நூல் நிலையத்திற்கு அருகில் வைத்துப் பங்கீட்டு அட்டைக்குத் தலா ஐந்து தேங்காய்கள் வீதம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## 15 நீரிறைக்கும் இயந்திரங்கள் ஒப்படைப்பு

தென்மராட்சி, பெப். 18

கொடிகாமம் பொலீஸாரால் கைதடி கள்ளிநகர் என்னும் இடத்திலுள்ள வீட்டிலிருந்து மீட்கப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்ட 15 நீரிறைக்கும் இயந்திரங்கள் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் அ. பிறேம்சங்கர் முன்னிலையில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கொடிகாமம் பொலீஸாரால் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்ட போதிலும், பாதுகாப்புக் கருதி ஓரிடத்தில் வைக்கப்பட்டதாக அதன் உரிமையாளர்கள் நீதிவானிடம் தெரிவித்ததை அடுத்து அவற்றை மீள ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-117)

# கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் சேகரித்த கையெழுத்துப் பட்டியல்

## பிரிட்டனுக்கு அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டாம் என்ற கோரிக்கைக்கு ஆதரவாகக் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினால் சேகரிக்கப்பட்ட கையெழுத்துப் பட்டியல் பிரிட்டனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் தூதுவர் மற்றும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் ஆகியோருக்குப் பக்ஸ் மூலம் இந்தப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டக் கத்தோலிக்க குருக்கள், அருட் சகோதரிகளிடம் பெறப்பட்ட கையெழுத்துக்களே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டன. (இ 5-6-ரி)

## ஜனாதிபதி சந்திரிகா இந்தியா செல்கிறார்

கொழும்பு, பெப். 18

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 22 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார்.

இந்திய விஜயத்தைத் தொடர்ந்து அடுத்த மாதம் ஜனாதிபதி ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்குச் செல்லும் ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் வாஜ்பாய், ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் மற்றும் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

3 நாள் இந்திய விஜயத்தில் இருதரப்பு உறவுகள் பிராந்திய, சர்வதேச விவகாரங்களுடன் இனப் பிரச்சினை குறித்தும் முக்கிய பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் என்று அவதானிகள் தெரிவித்தனர். (க)

## சிறுதானியச் செய்கை; விவசாயிகள் ஆர்வம்

மூளாய், பெப். 18

வலிகாமம் மேற்கில் விவசாயிகள் இம்முறை சிறுதானியச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

பெரும்போக அறுவடையைத் தொடர்ந்து எள், பயறு, குரக்கன் போன்ற சிறுதானிய வகைகள் பயிரிடப்பட்டு வருகின்றன.

(க—99)

## வலி. மேற்கு கரையோரங்களில் தேடுதல் நடவடிக்கை அதிகரிப்பு

மூளாய், பெப். 18

வலிகாமம் மேற்கின் கரையோரப் பகுதிகளில் கடற்படையினரின் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் மத்தி மூளாய் பொன்னாலை போன்ற பகுதிகளிலேயே வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு தடவைகள் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நடைபெற்று வருகின்றன.

அதிகாலையிலேயே வீடுகளுக்குச் செல்லும் கடற்படையினர் பொது மக்களிடம் இருந்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட இடத்திற்கு வருமாறு கட்டளையிடுகின்றனர் அங்கு நடக்கும் விசாரணைகளின் பின்னரே அடையாள அட்டைகள் திருப்பி வழங்கப்படுகின்றன.

இதற்கிடையில் மூளாய், பொன்னாலைப் பகுதிகளில் உள்ள வீதித்தடை நிலையங்களிலும் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே வீதியால் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

(க–99)

## மரவேலைப் பயிற்சி; மாணவருக்குப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 18

தொழில்துறை திணைக்களத்தின் மரவேலைப் பயிற்சிப் பாடசாலைகளில் பயிற்சிநெறியைத் தொடர்ந்த மாணவர்களுக்கு பரீட்சை நடத்தி சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

இந்தப்பரீட்சையில்தோற்ற விரும்புகின்ற மாணவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் தங்கள் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு முகாமைத்துவ உதவியாளர் ஆ. பிரபாகரி தெரிவித்துள்ளார். (க)

### நன்றி நல்கி ஆசிபெறுகின்றேன்

02—01—2001 அன்றைய தினத்தில் காஞ்சி காமகோடி பீடத்தில் நடைபெற்ற பாராட்டு வைபவ விழாவில் இலங்கையில் இருந்து 25-05-1999 ஆம் ஆண்டு சமஸ்கிருத கல்வி பயிலுவதற்கு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட மாணவனாகிய எனக்கு பீடத்தால் வழங்கப்பட்ட

(சிவாச்சார்ய இளஞ்சுடர்
சிவ பிரம்மஸ்ரீ நா. பால. ஸ்கந்தரூபக்குருக்கள்)

வேதம், ஆகமம், சோதிடம், இலக்கியவரலாறு ஆகிய பாடங்களில் சித்தியடைந்தமைக்கான நற்சான்றிதழும் விருது வழங்கிய பீடத்தினருக்கும், ஆசியருக்கும், இந்த அரிய வாய்ப்பினை நல்கிய சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்துக்கும், நிர்வாக சபையினருக்கும், தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது குடும்ப சார்பாக நன்றிகளைத் தெரிவித்து பெரியோர்களின் ஆசியைப் பெறுகின்றோம்.

நன்றியுடன்

சிவப்பிரம்மஸ்ரீ
வேதசிவாகம ஜோதிடகோமணி
நா. பாலசுப்பிரமணியக்குருக்கள்
கௌரீஸ்வரி குடும்பம்,
நா. பால. ஸ்கந்தரூபக்குருக்கள்.

நாகேந்திரபீடம்,
24, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். [84312]

# மாற்றீடான தீர்வு.....

சமாதான - சகஜமான சூழ்நிலையில் பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு இறுதியான - உறுதியான தீர்வைக் காண்பதற்குத் தாம் தயார் என விடுதலைப் புலிகள் அறிவித்ததுடன் அமையாமல் -

தங்கள் அபிலாஷையையும் அந்தரங்க சுத்தியையும் மேலும் உறுதிப்படுத்தும் விதத்தில் ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தத்தையும் பிரகடனப்படுத்தி அதை நேர்மையுடன் கடைப்பிடிக்கவும் தொடங்கியதன் பின்னர் - விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள்; அதனாலேதான் போர்நிறுத்தம். சமாதானப் பேச்சு வார்த்தை போன்றவற்றுக்குத் தாம் தயார் என அறிவித்துள்ளார்கள் - புலிகளை நம்பக்கூடாது; நம்பவே கூடாது. பேச்சுவார்த்தை என்று சொல்லிக்கொண்டு - நாளகளைக் கடத்திக்கொண்டு - தங்களைப் பலப்படுத்திக் கொண்டவுடன் மீண்டும் போரைத் தொடங்குவார்கள்- புலிகளின் போர் நிறுத்தம் என்பது ஒரு கண்துடைப்பு; அப்பட்டமான ஒரு சூழ்ச்சி. அந்த வலைக்குள் அரசாங்கம் ஒருபோதும் சிக்கிக் கொள்ளாது - அப்பாவி இலங்கையர்களையும் சர்வதேச சமூகத்தினரையும் ஒரே நேரத்தில் ஏமாற்றுவதற்காகவே புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கின்றார்கள்; இந்த ஏமாற்ற வித்தையை உணர்ந்து கொள்ளும் சக்தி. சர்வதேசச் சமூகத்துக்கு இருக்குதோ இல்லையோ, எமது அரசாங்கத்திடம் நிறையவே இருக்கின்றது. முன்னர் நடந்ததைப்போல் மீண்டும் நாம் ஏமாறமாட்டோம் -

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையிலே தலையிடுவதற்கு நோர்வே நாட்டுக்கோ வேறு எந்த ஒரு நாட்டுக்கோ எவ்வித உரிமையுமில்லை; இந்தப் பிரச்சினையை உரிய நேரத்தில் உரிய முறையில் இந்த அரசே தீர்த்துக்கொள்ளும் -

புலிகளை - பயங்கரவாதிகளை அழித்து ஒழிக்கும்வரை போர் நிறுத்தம் - சமாதானம் - பேச்சுவார்த்தை - என்ற பேச்சுக்கே இடமில்லை -

என்பன போன்ற "தீர்ப்புக்கள்", சவால்கள், சவடால்கள், வீரமுழக்கங்கள் செய்யப்பட்டன.

இரண்டு முழு மாதங்களை அவற்றுக்காக "அர்ப்பணித்த" பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தை சம்பந்தமான அரசின் நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறார் சந்திரிகா அம்மையார்!

பேச்சுவார்த்தைகளை நடத்துவது தொடர்பாகப் புலிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது. இந்த நல்ல சந்தர்ப்பத்தை உரிய முறையிற் பயன்படுத்திக் கொள்வது அவசியம் - என்ன யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டாலும், சமாதானத்தை அடைவதற்காக அவற்றை ஆராய்ந்து, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்- அனைத்து மக்களும் ஐக்கியப்பட்டு, *சமத்துவத்தோடும் கௌரவத்தோடும்* வாழக்கூடிய ஒரு தீர்வைக் காண்பதற்காகவே இந்தப் பேச்சுக்கள் நடத்தப்படும் - யுத்தமும் மோதலும் இல்லாத - *அனைவருக்கும* சுதந்திரமும் சமத்துவமும் கிடைக்கின்ற - அமைதி பூர்வமான சமூகத்திலேதான் தேசிய சுதந்திரத்தின் பரிபூரணப் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்ற அவருடைய சுதந்திர தினச் செய்தியில்லுள்ள இந்த முக்கியமான பகுதிகளில் காணப்படும் ஒவ்வொரு சொல்லையும் அளந்து; முழுமையான அர்த்தத்தைத் தெளிவாக உணர்ந்து உபயோகித்துள்ளார் எனக் கொண்டால் -

அப்பாவைப் போலவோ, அப்பாவி டட்லியைப் போலவோ இடைநடுவில் எல்லாவற்றையும் உடைத்து விட்டு "ஒப்பாரி" வைக்கமாட்டார் என்றும் கொண்டால்-

பேச்சுவார்த்தைகள் பெரு வெற்றியைத் தரும் என்பதைச் சர்வ நிச்சயமாகக் கொள்ளலாம்!

ஏனெனில் - சமாதான வழியில் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கின்றது. சமாதான வழி மூலம் கிட்டப்படும் தீர்வானது *நியாயமானதாக, நீதியானதாக, சமத்துவமானதாக, தமிழரின்*

## மணிமண்டபம்

*அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்வதாக* அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம் - என விடுதலைப் புலிகளின் தலைவரும் - இரண்டு மாதங்களின் முன்னர்- தன் மாவீரர் தினச் செய்தியில் ஏறக்குறைய, சந்திரிகாவின் கருத்துக்களையே வலியுறுத்தியிருந்தார்! தமிழீழத்தை உருவாக்குவதைப் பற்றியோ, நாட்டைப் பிளவு படுத்துவது பற்றியோ அரசாங்கம் ஒருபோதும் ஆராய மாட்டாது என்றும் சொல்லியுள்ளார் ஜனாதிபதி!

இதே வேளை - சிங்கள தேசம், இனவாதப் பிடியிலிருந்து விடுபடாமல், தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையைத் தொடருமானால், நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை - எனக் கூறி நியாயமான - நீதியான - சமத்துவமான தீர்வு கிடைத்தால் தமிழீழத்திற்கான அவசியம் ஏற்படாது என்பதைப் புலிகளின் தலைவர் குறிப்பிட்டுள்ளதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சமஷ்டி என்றால் நாடு பிரிந்துவிடும் -

அதிகாரப் பகிர்வு என்றால் தமிழீழம் உருவாகிவிடும்-

மாகாண சுயாட்சி என்றால் சிங்களவர்கள் நசுக்கப்படுவார்கள் - என அப்பாவிப் பொதுமக்களைப் பேய்க்காட்டிய - பயமுறுத்திய பேரினவாதம் பேச்சுவார்த்தை என்றவுடன் மீண்டும் எரிமலையாய்க் குமுறும்! அர்த்தமற்ற இந்தக் குமுறலைக் கண்டு "கிறுங்காமல்" தொலைநோக்குடனும் தாராள சிந்தையுடனும் பிரச்சினையின் ஒவ்வோர் அம்சத்தையும் ஆழமாகவும் அமைதியாகவும் ஆராய்ந்தால் - தமிழர் தாயகம் - இனத்துவ அடையாளம் - சுய நிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படையில் - தமிழீழத்துக்கு மாற்றீடான ஒரு தீர்வு ஏற்படுவது சாத்தியமே!

-சித்தன்.

# கிளாலியில் லான்ஸ் கோப்ரலை சுட்டுக் கொன்றார் சக சிப்பாய்!

## சந்தேக நபர் விளக்க மறியலில்

நெல்லியடி, பெப்.18

கடமையில் இருந்த, லான்ஸ் கோபரல் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட, சக சிப்பாய் ஒருவரை, இருவார காலம் விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் அ. பிறேம்சங்கர் உத்தரவிட்டார்.

இந்தச் சூட்டுச் சம்பவம் கடந்த 13 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு கிளாலி இராணுவ முகாமின் முன்னரங்க காவல் நிலையத்தில் இடம்பெற்றது. (கல்கமுவவைச் சேர்ந்த) கெமுனு படைப்பிரிவின் லான்ஸ் கோப்ரல், லால் சிசரகுமார (வயது 28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவர்.

இச்சம்பவம் தொடர்பாக, கொடிகாமம் பொலீஸார், சாவகச்சேரி நீதிவானுக்கு முறையிட்டதை அடுத்து சாவகச்சேரி நீதிவான் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு மரண விசாரணைக்கு உத்தரவிட்டார்.

சந்தேக நபரான சக சிப்பாய் வலப்பனை நுவரெலியாவைச் சேர்ந்த ஆர்.எம்.சந்திரசேனா, (வயது 24) என்பவரை கொடிகாமம் பொலீஸார் கைது செய்து, மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபரை இம்மாதம் 28 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடமையை ஒழுங்காகச் செய்யத தவறியமைக்காக கண்டித்ததை அடுத்தே சிப்பாய் லான்ஸ் கோப்ரலைச் சுட்டுக் கொன்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-109)

### படச்சுருள் யாருடையது?

நேற்று முன்தினம் இடம் பெற்ற பலாலி - இரத்மலானை இரண்டாவது விமான சேவையில் பயணம் மேற்கொள்வதற்கு வந்த பயணி ஒருவரால் தவறவிடப்பட்டதாகக் கருதப்படும் படச்சுருள் ஒன்று யாழ். சிவில் அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படச்சுருள் பனை அபிவிருத்திச்சபை சாரதியான ஐ. குணரத்தினத்திடம் உள்ளதாகவும்-

உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கீரிமலை சிவராத்திரி யாத்திரை:

# கட்டுப்பாட்டு விலையில் படையினர் பக்தர்களுக்கு உணவு வழங்குவர்

வலி.வடக்கு,பெப்.18

மகா சிவராத்திரையை ஒட்டி கீரிமலை செல்லும் பக்தர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை இராணுவத்தினர் கொழும்பு கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகிப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

515 ஆவது படைப்பிரிவு தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது.

கீரிமலை செல்லும் பக்தர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் குளிர்பானவகைகள் பிஸ்கட் வகைகள் உட்பட தேநீர் போன்றவற்றையும் இராணுவத்தினர் விற்பனைச் சாலை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

(ஜ-86)


# யா/மாவட்ட சமாதான நீதிவானாகப் பட்டம் பெற்ற

## பெருமகனுக்கு இன்று பெருவிழாச் சிறப்பு



**சிவகுருநாதர் இராமச்சந்திரா J.P.**

**இவர் நேற்றும் இன்றும்**

1) இலங்கை வர்த்தக சங்கத்தின் (டுபாக்கோ) உபசெயலாளர்.
2) வட்டு. மூளாய் றோட், உடலுளவிருத்திச் சங்கத்தை புனரமைப்புச் செய்தமை (1985)
3) வட்டு. மூளாய் றோட், மகளிர் இலக்கிய வட்டம் அமைத்தல் (1985).
4) வட்டு. மூளாய் றோட், ஐக்கிய நாணய சங்கத் தலைவர்.
5) சி.க.வ. சங்கங்களின் சங்கானை பிராந்திய சபைத் தலைவர்.
6) சி.க.வ.சங்கங்களின் யா.மாவட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்.
7) சங்கானை ப.நோ.கூ. கிளை 10 தலைவர்.
8) யா.மா.கூட்டுறவுச் சபையில் வட்டு. மூளாய் றோட், ஐ.நா.ச.உறுப்பினர்.
9) வட்டு. மத்திய கல்லூரி பா.அ.ச.உறுப்பினர்.
10) வட்டு. மத்திய கல்லூரி ப.வி.ச. உறுப்பினர்.
11) வட்டு. சங்கரத்தை விவசாய சம்மேளனத்தின் பொருளாளர்.
12) வட்டு. கண்ணகி அம்மன் ஆலய உப தலைவர்.
13) வட்டு. மூளாய் வீதி மகளிர் இலக்கிய வட்டப் போஷகர்.

இடம : வட்டு/சுப்பிரமணிய வித்தியாலயம்.
காலம் : இன்று (18-02-2001) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2மணி.

*நேற்று நீங்கள் சமுதாயத்துக்காக*
*இன்று சமுதாயம் உங்களுக்காக*
*நாளை நீங்களும் சமுதாயமும் நாட்டுக்காக.*

- மூளாய் வீதி மக்கள்.
வட்டுக்கோட்டை.

(C/15355)

**மிலேனியம் படப்பிடிப்பாளர்கள்** - தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.
**தாஸ் போட்டோ அன் வீடியோ** - டச்சு றோட், சித்தன்கேணி.
**ஜீலானி தொலைத்தொடர்பு சேவை** - சிவன் கோயிலடி, சித்தன்கேணி.
**கேஷன் தொலைத் தொடர்பகம்** - மாவடி, வட்டுக்கோட்டை.
**ஸ்ரீராஜ் தொலைத் தொடர்பகம்** - தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.
**நாயகி தயாரிப்புக்கள், உள்ளூர் உற்பத்தி** - வட்டுக்கோட்டை.
**ஈசன் வீடியோ அன் ஓடியோ சென்ரர்** - மாவடி, வட்டுக்கோட்டை.
**வலைஃபூர்** - தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.
**லீலா ஸ்ரோர்ஸ்** - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
**பிரகாஷ் நகை மாடம்** - அடைக்கலம் தோட்டம், கந்தசாமிகோயிலடி, வட்டுக்கோட்டை.

**அஜித் படப்பிடிப்பாளர்** - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
**கணித அறிவு வளர்சோலை** - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
**பாலன் மில்ஸ் அன் தொலைத்தொடர்பகம்** - மாவடி, வட்டுக்கோட்டை.
**வட்டு வைத்திய நிலையம்** - மாவடி, வட்டுக்கோட்டை.
**சண்முகம் களஞ்சியம்** - சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
**சுட்டி பாம் சென்ரர்** - வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.
**K.J. கொம்மியூனிகேசன்** - வீடியோ,கணனி, போட்டோஸ்ரற் சென்ரர் - சித்தன்கேணி.
**ஸ்ரீ முருகன் களஞ்சியம்** - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
**சச்சியா இரும்பகம்** - தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.
**ஸ்ரீ துர்க்கா ஸ்ரோர்ஸ்** - தெல்லிப்பழை வீதி, மாவடிச் சந்தி.

# சந்தனக் கடத்தல் வீரப்பன் மன்னாரில் காணப்பட்டாரா?

கொழும்பு,பெப்.18

இந்தியாவில் தேடப்பட்டுவரும் பிரபல் கொள்ளைக்காரன் வீரப்பன் மன்னார் பகுதியில் காணப்பட்டாரா?

மன்னார் பகுதியில் வீரப்பனை தான நேரில் கண்டதாக 21ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவச் சாரதி ஒருவர் கூறியுள்ளதாக கொழும்பில் வெளியாகும் 'வீக்கெண்ட் எக்ஸ் பிரஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக் கிறது.

வவுனியாவில் இருந்து மன்னார் செல்லும் வீதியில் வீரப்பனையும் அவரது கூட்டாளிகள் இருவரையும் மிக நெருக்கமான முறையில் கண்ட தாகவும், அவர்களைப் பிடிப்பதற்கு முயன்றவேளை அவர்கள் காட்டுக் குள் தப்பி ஓடி விட்டதாகவும் ஏற்க வே படங்கள் மூலம் தெரிந்து வைத் திருந்தபடி அந்த நபர் வீரப்பன் தான் என்பதை உறுதிப்படுத்துவதாகவும் பிரஸ்தாப இராணுவச் சாரதி கூறியி ருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து சாரதி மேலதிகாரிகளிடம் முறையிட்டி ருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

(ஐ)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 01 - 08 - 1938

மறைவு 13 - 03 - 1999

## அமரர் சின்னக்குட்டி வேலுப்பிள்ளை

அன்புத் துணைவராய் பாசமிகு பண்புடைய தந்தையாய்
மேன்மையுற மக்களுக்காய் பலவளமும் சேர்த்து வைத்த - எங்கள் அப்பா
நீங்கள் மறைந்து ஈராண்டு சென்றதப்பா இப்பிறவி முடியும் வரை
எந்நாளும் மறவாது தொழுகின்றோம் உங்கள் பாதம் - நீங்கள்
மேன்மையுறும் கணபதியாம் நற்தம்பி குருநாதர் மலரடிகள் சேர்கவென
என்றென்றும் மலர் சாத்தி கண்களிலே நீர்வழிய வணங்குகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நிரந்தர முகவரி:
*'சிவகிரி'*
*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*

மனைவி, பிள்ளைகள்.
14/6, கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.

(84241)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 22 - 02 - 1956

மறைவு 19 - 01 - 2001

அமரர்

## ஐயாத்துரை ஸ்ரீஸ்காந்தராஜா

**பிறப்பிலும் நேசித்தோம்**

**இறப்பிலும் உம்மை மறவோம் அண்ணா!**

இன்று (18.02.2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்த னையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள் ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*த.முகவரி:*
*திரு.வி.கந்தையா,*
*கலட்டி அம்மன் வீதி,*
*கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(84171)

அன்புடன்
**சகோதரிமார்,**
**மைத்துனர்மார்,**
**மருமக்கள்.**

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

(நேற்றைய தொடர்ச்சி)

வெளிமாவட்டங்களுக்குப் பய ணம் செய்ய விண்ணப்பித்தோரில் இம்மாதம் 16ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக் கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (179989சி) | (180306ஏ) | (182076ஏ) |
| (182076பி) | (182097ஏ) | (182097பி) |
| (182107ஏ) | (182107பி) | (182107சி) |
| (182113ஏ) | (182198ஏ) | (182198பி) |

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| (120073ஏ) | (120073பி) | (142540ஏ) |
| (142540பி) | (145884ஏ) | (145884பி) |
| (151116ஏ) | (151116பி) | (154943ஏ) |
| (154943பி) | (154943சி) | (158093ஏ) |
| (158093பி) | (158093சி) | (158268ஏ) |
| (158268பி) | (158268சி) | (158268டி) |
| (158268ஈ) | (158295ஏ) | (160009ஏ) |
| (160282ஏ) | (160282பி) | (160282சி) |
| (160282டி) | (162407ஏ) | (162412ஏ) |
| (162412பி) | (162412சி) | (162461ஏ) |
| (164462ஏ) | (164614ஏ) | (164709ஏ) |
| (164807ஏ) | (164883ஏ) | (164963ஏ) |
| (165019ஏ) | (165024ஏ) | (165024பி) |
| (165098ஏ) | (165098பி) | (165145ஏ) |
| (165145பி) | (165147ஏ) | (165221ஏ) |
| (165267ஏ) | (165267பி) | (165279ஏ) |
| (165279பி) | (167292ஏ) | (167409எ) |
| (167409பி) | (167409சி) | (167409டி) |
| (167409ஈ) | (169501ஏ) | (172533ஏ) |
| (172533பி) | (172533சி) | (172533டி) |
| (172533ஈ) | (174247ஏ) | (174247பி) |
| (174252ஏ) | (174252பி) | (174252சி) |
| (174417ஏ) | (174490ஏ) | (174491ஏ) |
| (174491பி) | (174643ஏ) | (174643பி) |
| (174643சி) | (174643டி) | (176064ஏ) |
| (176087ஏ) | (176087பி) | (176087சி) |
| (176087டி) | (176098ஏ) | (176098பி) |
| (176098சி) | (176102ஏ) | (176133ஏ) |
| (176146ஏ) | (176193ஏ) | (176193பி) |
| (176193சி) | (176193டி) | (176193ஈ) |
| (176198ஏ) | (176238ஏ) | (176449ஏ) |
| (176449பி) | (176449சி) | (176449டி) |
| (176449ஈ) | (176504ஏ) | (177577ஏ) |
| (177578ஏ) | (177603ஏ) | (177611ஏ) |
| (177640ஏ) | (177644ஏ) | (177644பி) |
| (177644சி) | (177665ஏ) | (177689ஏ) |
| (177699ஏ) | (177703ஏ) | (177703பி) |
| (177703சி) | (177755ஏ) | (177847ஏ) |
| (177847பி) | (177878ஏ) | (177883ஏ) |
| (177883பி) | (177887ஏ) | (177887பி) |
| (177887சி) | (177894ஏ) | (177894பி) |
| (177894சி) | (177907ஏ) | (177907பி) |
| (177907சி) | (177912ஏ) | (177912பி) |
| (177912சி) | (177986ஏ) | (180546ஏ) |
| (181103ஏ) | (181297ஏ) | (181317ஏ) |
| (181325ஏ) | (182468ஏ) | (182468பி) |
| (182468சி) | (182468டி) | (182529ஏ) |
| (182552ஏ) | (182552பி) | (182552சி) |
| (183698ஏ) | | |

### உடுவில்

| | | |
|---|---|---|
| (177243ஏ) | (179528ஏ) | (179528பி) |
| (179528சி) | (179528டி) | (179561ஏ) |
| (179561பி) | (179561சி) | (179561டி) |
| (179562ஏ) | (179562பி) | (179615ஏ) |
| (179615பி) | (179660ஏ) | (179660பி) |
| (179676ஏ) | (179697ஏ) | (179697பி) |
| (179761ஏ) | | |

(க-10)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி அன்னை பெருமையடைகின்றாள்



எமது பீடாதிபதி

**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**


அவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்றமையை ஒட்டி அவரை வாழ்த்துகின்றோம்.

-விரிவுரையாளர்கள்.

(84286)


## சர்வதேச தரம்வாய்ந்தது

ஆடைகளுக்கு புதுப்பொலிவையும் புது பாதுகாப்பையும் நல் நறுமணத்தையும் தருவது **வேக்**




ஒரு முறை பாவித்தால் இதன் வித்தியாசத்தை உணர்வீர்கள்



இயற்கை நறுமணம் கொண்டதும் கைகளுக்கு மிருதுவானதுமான வேக்



ஏக விநியோகஸ்தர்கள்: **சின்னத்துரை அன் சன்ஸ்,**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(C/15352)

### வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு

# சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் தொடர்பை ஏற்படுத்த ஆலோசனை

மூளாய், பெப். 18

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் இணைப்பை ஏற்படுத்துவதற்கும், சர்வதேச மட்டத்திலான கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் அங்கத்துவத்தை அல்லது சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும். ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது,

மேற்படி கல்லூரிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமெரிக்க பிரதித் தூதர் லூயிஸ் அம்ஸ்பாம் இந்த ஆலோசனையைத் தெரிவித்துள்ளார். இக்கல்லூரியின் கடந்த காலம் குறித்தும் எதிர்காலம் குறித்தும் தென்னிந்தியத்திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனுடன் கலந்துரையாடும் போதே அவர் இந்த ஆலோசனையைத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் பல்கலைக்கழகங்களுடன் அல்லது இந்தியாவின் பல்கலைக்கழகங்களுடன் இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர் கல்வித் துறையை பல்கலைக்கழக மட்டத்துக்கு உயர்த்த முடியும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆலோசனையை சாதகமான முறையில் பரிசீலிக்கப்படும் என்று பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தெரிவித்தார். (ஐ — 99)

## யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் மலரும்

### அமெரிக்கப் பிரதித் தூதர் நம்பிக்கை

மூளாய், பெப். 18

''பல வருடங்களாக இலங்கையில் நடைபெறும் யுத்தம் நிறுத்தப்பட்டு மிக விரைவில் சமாதானம் ஏற்படும் என்று நான் நம்புகின்றேன்.''

இவ்வாறு அமெரிக்கப் பிரதித் தூதுவர் லூயிஸ் அம்ஸ்லாம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு விஜயம் செய்த போதே அங்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டு மக்கள் அமைதியான வாழ்க்கையையும், அபிவிருத்தியையும் விரும்புகின்றனர். இதை நான் மனதார உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. நாம் எதிர்பார்த்ததை விட இங்கு அமைதிச் சூழல் தற்போது நிலவுகிறது. யாழ்ப்பாணச் சூழல் தொடர்பாக மிகவும் சரியான தகவல்கள் எமக்கு இதுவரை கிட்டவில்லை. தற்போதையவிஜயத்தின்போதே உண்மையான நிலைமையைப்புரிந்துகொள்ள முடிகிறது. இனி வரும் காலங்களில் யாழ்ப்பாணம் தொடர்பான எமது கொள்கையை நாம் மீளாய்வுசெய்யவேண்டியுள்ளது என்றும் அமெரிக்காவின் பிரதித் தூதுவர் மேலும் தெரிவித்தார்.

தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் இல்லத்தில் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனைச் சந்தித்த அமெரிக்கப் பிரதித் தூதுவர் நீண்ட நேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டார். குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும், யாழ்ப்பாணக் கல்லூரியின் பூர்வீக வரலாறு தொடர்பாகவும் அறிந்து கொள்வதில் அமெரிக்கத் தூதர் அதிக ஆர்வம் காட்டியதாகப் பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் தெரிவித்தார்.

கடந்த பன்னிரண்டு வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க இராஜதந்திரி இவரே என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ 99)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 18

புத்தூர், நவக்கிரிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற டிராக்டர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களான தொண்டமானாறு உடுப்பிட்டியைச் சேர்ந்த பொன்னர் இராஜேஸ்வரன் [வயது 34], கே. அருமைத்துரை [வயது 40] ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-15)

## மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப், 18

தென்புலோலி ஒல்லை வீரபத்திரர் ஆலயத்தின் மண்டலாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (க-10)

## மாநகரப் பகுதியிலுள்ள வீதிகள் வடிகால்களைத் திருத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப் 18

யாழ். மாநகர சபையிலுள்ள ஆறு புளொட் உறுப்பினர்களின் வேலைத் திட்டங்களுக்கென இவ்வாண்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் வீதிகள், வடிகால்கள் திருத்தம் செய்யப்படும் என்று புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

குருநகர்ப்பகுதி, சின்னக்கடைப்பகுதி குறுக்குவீதிகள், ஈச்சமோட்டை வீதி, நாவாந்துறையிலுள்ள உள் வீதிகள், கொட்டடி சீனிவாசகம் வீதி, ஒட்டுமடம் ஐயனார் கோயிலடி வீதி, ஓடை ஒழுங்கை, பி.ஏ. தம்பிலேன், பொன்னப்பா லேன் உட்பட பலவடிகால்களும் இந்த நிதியில் திருத்தியமைக்கப்படும் என்று யாழ். மாநகரசபை (புளொட்) உறுப்பினர் மு. தவநாதன் தெரிவித்தார். (க-5)

## தப்பியோடி கைதான படையினர் 23 பேர் மீண்டும் ஓட்டம்!

கொழும்பு, பெப். 18

ஏற்கனவே தப்பியோடிக் கைது செய்யப்பட்ட படையினர் 23 பேர் மீண்டும் முகாமில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அனுராதபுரம், மாகனகராவ என்ற இடத்திலுள்ள இராணுவ முகாம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சில வருடங்களுக்கு முன் இராணுவ சேவையில் இருந்து தப்பியோடிய 83 படைவீரர்களை இராணுவ பொலீஸார் கைது செய்து மேற்படி மாகனகராவ முகாமில் கையளித்திருந்தனர்,

அவர்களுக்கு மீள் பயிற்சி வழங்கப்பட்டு வந்தது.

அவர்களில் 23 பேர் வியாழனன்று முகாமில் இருந்து தப்பி ஓடி விட்டார்கள். அவர்களில் 5பேர் அன்றைய தினமே கைது செய்யப்பட்டு விட்டனர்.

ஏனைய 18 படைவீரர்களைத் தேடி படையினர் வலை விரித்துள்ளனர். (க)

## சாவகச்சேரி மக்கள் விரைவில் வீடுகளைப்பார்வையிட அனுமதி?

தென்மராட்சி, பெப் 18

பாதுகாப்புக் கருதிச் சாவகச்சேரி பெரிய அரசடியிலிருந்து கொடிகாமம் வரையுள்ள பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள மக்களை விரைவில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தவும்—

ஏனைய பகுதிகளில் உள்ள மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடவும், உடைமைகளை மீட்டு வரவும்—

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடிகாமத்தில் நடைபெற்ற கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

மீளக் குடியமர்தல் மற்றும் வீடுகளைப் பார்வையிடுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் விரைவில் மக்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

### ப. நோ. கூ. சங்கத்தில் நடந்த மோசடி;

## கிளை முகாமையாளரிடம் தண்டம் அறவிட முடிவு

தென்மராட்சி, பெப். 18

நிவாரணப் பொருள்கள் விநியோகித்தபோது எட்டுப் பற்றுச்சீட்டுகளுக்கு 3 கிலோ 170 கிராம் பொருள்கள் குறைவாக விநியோகித்தமைக்காகக் கிளை முகாமையாளர் ஒருவரிடமிருந்து ஒரு கிராம் குறைவுக்கு இரண்டு ரூபா வீதம் தண்டம் அறவிடச் சங்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

கொடிகாமம் ப. நோ. கூ. சங்கத்தின் கிளை ஒன்றில் ஜனவரி மாத நிவாரணப் பொருள்கள் விநியோகத்தின் போது யாழ். மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் தலைமையிலான கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் திடீர்ப்பரிசோதனை நடத்தி இந்த மோசடியைக் கண்டுபிடித்துச் சங்கத்திற்குத் தெரியப்படுத்தி இருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாகச் சங்க நெறியாளர் சபையினர், சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளருக்கு(3170X2) 6 ஆயிரத்து 340 ரூபாவை அபராதமாக விதித்துள்ளது. அந்த முகாமையாளருக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-117)

## கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைப்பு

தென்மராட்சி, பெப். 18

பளைப் பிரதேச கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவை புனரமைக்கப்படவுள்ளன.

இதன்பிரகாரம் பெரிய பளை கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் நாளை திங்கட்கிழமை புலோலி பளைப் பிரதேச தையல் பயிற்சி நிலையத்திலும் —

புலோப்பளை கிழக்கு கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை யாழ். மாணிப்பாய் வீதியில் உள்ள புலோப்பளை கிராம அலுவலரின் அலுவலகத்திலும் நடைபெறும். (அ—117)

## பெண்கள் தினத்தையொட்டி பேச்சு, கவிதைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவினால் அனைத்துலகப் பெண்கள் தினத்தையொட்டிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் தரம் 10, 11மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி 'மகளிர் தலைமைத்துவம்' எனும் தலைப்பிலும் தரம் 12, 13 மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி 'எமது சமூக வளர்ச்சியில் பெண்களின் பங்கு' எனும் தலைப்பிலும்—

மகளிர் அங்கத்தவர்களுக்கான கவிதைப்போட்டி, கூட்டுறவு, மகளிர் தலைமைத்துவம், பிரதேச அபிவிருத்தி தொடர்பானதாகவும் அமைந்திருத்தல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவிகள் தங்கள் விண்ணப்பங்களை பாடசாலை அதிபரின் சிபாரிசுடனும் மகளிர் அங்கத்தவர்கள் சங்கத் தலைவர் அல்லது பொது முகாமையாளரின் சிபாரிசுடனும் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பு மாவட்டச் செயலாளர் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை, வீரசிங்கம் மண்டபம், கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

பேச்சுப் போட்டிகள் மார்ச் மாதம் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கும் கவிதைப் போட்டிகள் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கும் மணிக்கூட்டு வீதியில் உள்ள கூட்டுறவுச் சபையின் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் என்று மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார். (க-10)

## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 18

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் முறைசாராக் கல்விப் பிரிவினால் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (க-10)


## யாழ் மாவட்டக் கூட்டுறவுக்கிராமிய வங்கிகளின் சமாசம் வரையுள்ளது

## பண்ணை முகாமையாளர் பதவி (ஒப்பந்தம்)

இச் சமாசம் விரைவில் பொறுப்பேற்று நிர்வகிக்கவுள்ள அச்சுவேலி கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையத்துக்கான பண்ணை முகாமையாளருக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஏதாவது ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. பேராதனைப் பல்கலைக்கழக விலங்கு வைத்திய சுகாதாரப் பீடத்திலிருந்து சித்தியெய்திய பட்டதாரி (B V Sc.), அல்லது ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து சித்தியெய்திய விவசாயப்பட்டதாரி.

அல்லது

2. வெலிசறை விலங்கு பரிபாலனப் பாடசாலையிலிருந்து அல்லது குண்டசாலை விலங்கு பரிபாலன பாடசாலையில் விலங்கு பரிபாலன டிப்ளோமா பட்டம் பெற்றவர்.

அல்லது

3. குண்டசாலை விவசாயப் பயிற்சிப் பாடசாலை அல்லது வவுனியா விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் விவசாய டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள்.

4. மேற்படி தகைமைகளுக்கு அமைவாகக் கடமை புரிந்து ஓய்வு பெற்றவர்கள்.

5. கால்நடை விரிவாக்கல் போதனாசிரியர்களாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் கடமைபுரிந்து ஓய்வு பெற்றவர்கள்.

நியமனம் ஒப்பந்த அடிப்படையிலானது என்பதுடன் சம்பளம் பேசிநிர்ணயிக்கக் கூடியது மாகும். விண்ணப்பங்கள் யாவும் 27—02—2001 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக சமாச முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் (விண்ணப்பத்தின் இடது பக்க மேல்மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்).

- பொது முகாமையாளர்.

75, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-15353)

# பிரம்மஸ்ரீ சபாரத்தி

# ஷஷ்டியப்த பூர்த்தி விழா

18.02.2


**சிவம் சவுண்ட்ஸ்**

ஒலி, ஒளி அமைப்பாளர்

ஏழாலை மத்தி, ஏழாலை.

உரிமையாளர் - T.தங்கசிவம்



**C.K.P**

தொலைத் தொடர்பு நிலையம்

தொ.இல - 021-2907,

தொ.நகல் - 021-3189

வெளிநாடு - 0094212907, 0094213189

ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.



**பிரவீன்**

தொலைத்தொடர்பகம்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

தொ.இல. - 021-3524

வெளியூர் - 009421-3524



**சந்திரன் பான்சிபலஸ்**

நவாலி றோட், ஆனைக்கோட்டை.

**கண்ணன் கணனிப் பயிற்சி நிலையம்**

(உயரப்புலம் ஆனைக்கோட்டை,

பிள்ளையார் கோயில்முன்பாக)



**தம்பி**

பல்பொருள் களஞ்சியம்

பலாலிவீதி, ஊரெழு.



**வதனா களஞ்சியம்**

நந்தாவில் அம்மன் கோயிலடி,

கொக்குவில்.

உரிமையாளர்: கி.செந்திநாதன்



**பவி வெல்டிங் வேர்க் சொப்**

ஸ்ரோர் முன்பாக, இருபாலை வீதி,

கோண்டாவில்.

சகல விதமான வெல்டிங் வேலைகளும்

தரமாகச் செய்து கொடுக்கப்படும்.


## இறைவனுக்கு அடுத்த நிலையில் போற்றப்படுபவர்கள்

இந்து மதத்திலே இறைவனுக்குப் பூஜை செய்யும் சிவாச்சாரியார்கள் இறைவனுக்கு அடுத்ததாகப் போற்றப்படுகிறார்கள். காரணம் அவர்களின் குருவுக்குரிய அழகிய தோற்றப்பொலிவு, பக்தியோடு கூடிய பூஜை, இன்முகத்தோடு கூடிய பேச்சு, இறைவனுக்கும் பக்தனுக்குமிடையேயுள்ள வழிபாட்டுக்குரிய தொடர்பு, இவைகள் எல்லாம் சேர்ந்த ஒரு சிவாச்சாரியாரைக் கண்டவுடனேயே கையெடுத்துக் கும்பிடவேண்டும் போலிருக்கும். இது இந்து மதத்திற்குரிய சிறைப்புடைய தன்மை. இவ்வகைச் சிறப்பு மிக்க சிவாச்சாரியர்களிலொருவர் தான் இன்று ஷஷ்டியப்த பூர்த்தி விழாக்காணும் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் அவர்கள். இவர் எத்தனையோ ஆலயங்களில் நித்திய நைமித்திய பூசை விழாக்களை நடத்தியவர். குறிப்பாக எம்முடன் குடும்பரீதியாகவும் கிரியைகள் என்பவற்றில் நெருங்கிய தொடர்புடையவர். சாவகச்சேரி துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் கோயில் குருக்களாக இருந்து எம்முடன் ஆற்றிய சேவை மறக்கமுடியாதது. இன்று அவர் சேவை கோண்டாவில் அரசடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறுவது போற்றத்தக்கது. அவரது பக்தி பூர்வமான சேவை என்றும் நாட்டுக்குத் தேவை. இன்று மணி விழாக் காணும் குருக்கள் அவர்கள் சதாபிஷேக விழாவையும் காண வேண்டும். நோயற்ற வாழ்வுடன் கிரியைநெறி தவறாத சேவை என்பவற்றோடு நீடு வாழவும் அவர் புத்திரச் செல்வங்கள் நன்றாக வாழவும் எல்லாம் வல்ல விநாயகர், அம்பிகை பாதங்களை வழுத்தி வாழ்த்துகின்றேன்.

**சிவஸ்ரீ கி.சோமசுந்தரக்குருக்கள்,** மட்டுவில் வடக்கு.

## வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறுமைக்கு வழிகாணும் வழியில்.....

சைவசமயத்தவர்களாகிய நாம் எக்கருமத்தையும் விநாயகர் பூசை வணக்கஞ்செய்தே தொடங்குகின்றோம். வணங்குவோருக்கு விக்கினங்களை நீக்கியருளும் முதன்மையுடையவர் விநாயகர். எனவே அவர் வழிபாட்டை, பூசைக்கிரமங்களை ஆகம விதிமுறை தவறாது அனுசரித்து எங்கள் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் கடமையாற்றிவரும் பிரதிஷ்டாமணி, வேதாகம கிரியாஜோதி, ஆகம கிரியா திலகம் பிரம்மஸ்ரீ ந.சபாரத்தினசிவாச்சாரியார் அவர்களின் மணிவிழா நடப்பதை அறிந்து ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினராகிய நாம் மிகவும் பெருமிதம் அடைகிறோம். 1994ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாலயத்தில் பிரதமகுருவாக கடமையாற்றிவருகிறார். அவர் தலைமையில் மஹோற்சவம் இலட்சார்ச்சனை மற்றும் மாத உபயங்கள் யாவும் அடியார்கள் மனதில் பக்திப்பரவசம் ஏற்படும் வகையில் ஆற்றிவரும் பூசைக் கிரமங்கள் அடியார்கள் பலராலும் போற்றப்படுகின்றன. நித்திய நைமித்திய பூசைகள் நேரம் தவறாது அற்றப்படுவது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். பக்தி வலையில் படுவோனாகிய விநாயகப் பெருமான், தன்னைச் சரணடைந்து பக்தி செய்து வழிபட்டு வேண்டுவார் யாவர்க்கும் வேண்டுவனவற்றை ஈயும் கருணை உள்ளம் கொண்டவர். விழா நாயகராகிய சிவஸ்ரீ ந.சபாரத்தின சிவாச்சாரியார் அவர்கள் விநாயகர் வலையில் சிக்குண்டு வாழ்க்கையில் பல முன்னேற்றங்களையும் கண்டுள்ளார். குறிப்பாக அவரது மகன் சிவஸ்ரீ ச.சந்தனக்குருக்கள் அவர்கள் இவ்வாலயத்தில் ஆச்சார்ய அபிஷேகம் பெற்று தற்பொழுது நந்தாவில் ஸ்ரீ மனோன்மணி தேவஸ்தானத்தில் பிரதம குருவாகக் கடமையாற்றி வருகிறார். மனித உள்ளமும், மனமும் பரிபக்குவம் அடைந்து இறைவன் திருவருளைப் பெறுவதற்கு விநாயகர் வழிபாடு ஒரு சிறந்த உதாரணமாகும். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மறுமைக்கு வழிகாண வைக்கும் முறையில் வழிபாட்டு ஆகம முறைகளை தவறாது விநாயகர் அடியாருக்கு அருளும் மணி விழா நாயகராகிய பிரம்மஸ்ரீ ந.சபாரத்தின சிவாச்சாரியார் அவர்களை ஆசிமட அரசடி விநாயகர் ஆலய நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை சார்பிலும் அடியார்கள் சார்பிலும் 'திருவருள் பொலிந்து வாழி வாழி' என்று இன்னும் பல்லாண்டு காலம் பணியில் இருக்க மன நிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

'இறைவன் அருட்குடைக்கீழ் எல்லோரும்
இன்ப நிறைவெய்தி வாழ்க நிதம்'

**நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை,**
**கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்.**

## நெறிபிறழ விரும்பாத பண்பினர்

ஆசிமட அரசடிப் பிள்ளையார் கோயிலுக்குப் பூசகராக வந்தநாள் தொடக்கம் பிரம்மஸ்ரீ ந.சபாரத்தினக்குருக்கள் அவர்களை நான் நன்கு அறிவேன். அவர் மிகுந்த ஆசார சீலர். கிரியைகளில் நெறிபிறழ விரும்பாத பண்பினர். அனைத்து உற்சவங்களையும் அடியார்களது மனம் நிறைவடையும் வண்ணம் நடத்துவார்கள். கும்பாபிஷேக சங்காபிஷேக வைபவங்களை நடத்தும் போது அடியார்களைப் பக்தி வயப்படுத்தி விடுவது குருக்கள் ஐயா அவர்களது தனிச் சிறப்பாகும். என்னைப் பொறுத்த அளவில் அவர் எனக்கு என்றும் மிகச்சிறப்பானதோர் சைவ ஆகம கிரியாபூஷணமாகவே தென்படுவதுண்டு. அத்தகைய ஒருவரின் மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்கி அவர் பல்லாண்டு பல்லாண்டு காலம் நல்லாயிருக்க வேண்டுமென அரசடி விநாயகனைப் பணிந்து வேண்டிப் பிரார்த்தனை செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**வைத்தியகலாநிதி சரவணமுத்து குகதாசன்**
**கண் சத்திரசிகிச்சை நிபுணர்.**


**பிறேம் நகைமாடம்**

மானிப்பாய்.




### குருக்கள் தம் வாழ்க்கை

| | | |
|---|---|---|
| உதயம் | : | 03-03-1 |
| பெற்றோர் | : | காசிவ |
| பரம்பரையில் உதித்த | | சிவஸ்ரீ |
| | | கமலா |
| கோத்திரம் | : | காசிப |
| சொந்த இடம் | : | புன்னா |
| | | யாழ்ப் |
| வித்தியாரம்பம் குரு | : | சிவஸ்ரீ |
| | | குருக் |
| உபநயன தீட்ஜா குரு | : | நா.சி |
| ஆரம்ப/உயர்தரகல்வி | : | புன்னா |
| | | அமெரி |
| | | புன்னா |
| | | ஆங்கி |
| ஆசாரிய தீட்க்ஷா குரு | : | கைலா |
| விவாக தினம் | : | 1963 |
| பெற்ற கௌரவிப்புக்கள் | : | 'வேதா |
| | | 'ஆகம |
| | | 'பிரதி |


**I.T.N**

கொமினிக்கேசன் அன் வீடியோ

27, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு.

T.P.No - Fax No

021 - 3123



**அதிபதீஸ்வரா களஞ்சியம்**

மா.லி.பாஸ்கரன்

அம்மன் வீதி,

கோண்டாவில்.



**போட்டோ ஸ்ரீ மீரா**

வீடியோ + கலர்

குளப்பிட்டி சந்தி, கொக்குவில்.



**ஒமெக்ஸ்**

எலெக்ரிக்கல்ஸ்

& மோட்டோ றிவைன்டிங்ஸ்,

கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

உரிமையாளர் - ந.அற்புதராசா.



**துர்க்கா களஞ்சியம்**

பொற்பதி வீதி,

கொக்குவில் கிழக்கு.

உரிமையாளர்: கி.செந்திநாதன்



**உதய சூரியன்**

வர்த்தக நிலையம்

குப்பிளான் சந்தி, குப்பிளான்

உரிமையாளர் - அன்னலிங்கம்



**அரசடி விநா**

மரத்தொழிற்சா

இருபாலை வீதி, கோ

உரிமையாளர்: க.நட



**பிள்ளையார்**

அரைக்கும் ஆலையும்

**அம்பாள்**

தொலைத் தொடர்பு நிலையமும்

T.P - No - 021 - 3003, IDD - 0094213003

பொற்பதிவீதி, கொக்குவில் கிழக்கு.



**ஜேய நகை மாளிகை**

பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.

உரிமையாளர்:

செல்லத்துரைப்பத்தர் (ரவி)



**சாயி ஸ்ரோர்ஸ்**

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு.

உரிமையாளர்:

V.கோபாலகிருஷ்ணன்.


ஓர் அ

வாழ்த்து


**சிவாஸ்**

கிறீம் ஹவுஸ்,

நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு.



**பிள்ளையார்**

எலெக்றிக்கல் அன் கொமினிக்கேஷன்

T.P. No-021-2266

பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.



**நஷனல்ஸ்**

வீடியோ சென்ரர்

182, காங்கேசன்துறை வீதி,

கொக்குவில்.

உரிமையாளர் - க.கேசவன்



**தணிஸ் றெ**

மூர்த்தநயினார் கோ

ஆனைக்கோட்

புடைவை வகைகள், அன்பளி

மலிவான விலையில் பெற்றுக்

# ...தின சிவாச்சாரியார்

# ...ா (மணி விழா) சிறப்பு மலர்

...02.2001



## இறைபணியே நிறை பணியாக....

"யாதேவீ ஸர்வ பூதேசு துர்க்கா ரூபேணசம்ஸ்திதா நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம" என்று அனுதினமும் குலதெய்வம் துர்க்கையன்னையைப் போற்றி நற்பேறு பெற்று பெருவாழ்வுடன் விளங்குகின்றவராக இன்று மணிவிழாக்காணும் பெருமைக்குரிய வராக விளங்குபவர் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் அவர்கள். சாவகச்சேரி துர்க்கையம்பாளையும் நந்தாவில் மனோன்மணி அம்பாளையும் கோண்டாவில் அரசடி விநாயகரையும் தமது வாழ்நாளில் வாழ்த்தி வளம் பல பெற்று விளங்கும் குருக்கள் அவர்கள் இறைபணியே நிறைபணியாகக் கொண்டு வாழ்கின்ற இப்பெரியார் தமது அறுபதாண்டு பூர்த்தி விழாவில் சாஸ்திரதானமாக 'துர்க்கா சஹஸ்ரநாமம்' என்னும் சிறந்த நூலை வெளியிடுவதும் 'பொன் குடத்திலகம்' போல் சிறப்புடைத்தாகும்.

இவர் தம் அன்புத் துணைவியரோடும் புத்திரச் செல்வங்களுடனும் மணி விழாக்கண்டு மகிழும் குருக்கள் அவர்கள் சதாபிஷேக விழாவையும் காண வேண்டும், அணிமாதி அஷ்ட போகங்களையும் பெறவேண்டும், என இறையருளை வேண்டுவதுடன் அவரின் புத்திரச் செல்வங்களும் நல்லனவெல்லாம் தரும் நற்செல்வங்களையும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழும் வண்ணம் ஓங்காரநாயகனையும் நாயகியையும் அன்புடன் வணங்கிப் பிரார்த்திக்கின்றோம். சுபம்

**சமஸ்கிருத பண்டிதர் கி.சதாசிவ சர்மா.** மட்டுவில்

## பக்தி நெறியில் நிலைப்பவர்

அன்புசார் பெருந்தகையீர்!

சிவஸ்ரீ ந.சபாரத்தினக் குருக்கள், திருமதி அமிர்தாம்பிகை அம்மா தம்பதிகளினுடைய ஷஷ்டியப்த பூர்த்தி (அறுபது வயது பூர்த்தி) காண்பதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். வேத சிவாகம முறைப்படி நின்று ஆலய விழாக்களையும் சமய வைபவங்களையும் சிறப்பாகச் செய்யும் குருக்கள் அவர்கள் எல்லோரோடும் அன்பாகப் பழகும் சுபாவமும் எடுத்த கருமத்தை செவ்வனே ஆற்றும் திறமையும் கொண்டவர். பல ஆலயங்களில் குருவாக நின்று சைவமக்களுடைய பண் பாட்டிற்கும் பக்தி நெறிக்கும் தொண்டாற்றும் பெருமையாளன். அந்தணர்க்கே உரித்தான ஆறு கடமைகளை (ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்டுவித்தல், ஈதல், ஏற்றல்) நிறைவு செய்கின்ற குருத்து வப் பரம்பரையில் பிறந்து வாழ்ந்து காட்டுகின்ற தம்பதிகளுடைய மணி விழா எல்லோருடைய வாழ் விற்கும் வழிவகுப்பதாக அமைந்துள்ளது. இவருடைய பிள்ளைகளும் குருத்துவ வாழ்வினை வாழ்வது சிறப்புடையது. சிவஸ்ரீ ந.சபாரத்தினக்குருக்கள் திருமதி ச.அமிர் தாம்பிகை அம்மா தம்பதிகளுடைய ஆசி எல்லோருக்கும் கிடைப்பதாக! இன்றுபோல் என்றும் குருக்கள் தம்பதிகள் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமூகத்திற்கும் சமயத்திற்கும் தொண்டாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.**

## 'கிரியாஜோதி' நீடூழி வாழ்க!

காசிப ஹோத்திரத்திலே தேவப்பிராமண குலத்திலே காசிவாசி செந்திநாதையர் பரம்பரையிலே வித்துவான் கணேசஐயர் அவர்களின் அடிக்கொடியிலே உதித்த கடவுள் ஐயரின் மகனான நடராஜ ஐயரின் சிரேஷ்ட புத்திரனாக இன்று மணிவிழாக்காணும் கிரியாஜோதி சபாரத்தினக் குருக்கள் அவர்கள் புன்னாலைக்கட்டுவன் வடக்கு என்னும் விவசாயக் கிராமத்தில் பிறந்தார்.

சிறுவயது முதல் அவர் தனது பெரிய தந்தையாரான ஆறுமுகஐயர் அவர்களுடனேயே வளர்ந்து வந்தார். புன்னாலைக்கட்டுவனில் அமைந்துள்ள நாச்சிமார் கோயில் என்று அழைக்கப்படும் துர்க்கைஅம்மனையும் முருகன் ஆலயத்தையும் அவரது பெரிய தந்தையாருடன் நிர்வகித்து வந்தார். பெரிய தந்தையாரின் மறைவிற்குப்பின் அவரே அதன் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்திவந்தார்.

இவரின் வழித்தோன்றலான இவரது புத்திரர்களும் அக்கிராமத்தில் அமைந்த இராஜராஜேஸ்வரி அம்மன் ஐயனார் ஆலயம், குப்பிளான் என்னும் கிராமத்தில் அமைந்த சொர்க்கர் வளவு பிள்ளையார் ஆலயம் ஆகிய வற்றின் பூசைகளையும் ஏற்று நடத்தினர்.

இன்று மணி விழாக்காணும் 'கிரியாஜோதி' சிவஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் தனது துணைவியார் ஆகிய அமிர்தாம்பிகை அம்மா அவர்களின் வழித்துணையுடன் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்ந்து ஆகம கிரி யைகளில் அந்தணர்களே வியக்கத்தக்க அபிமானத்துக்கும் மதிப்பிற்கும் உரியவராக 'கிரியாஜோதி' என்னும் பட்டத்தைப் பெற்று மிளிர்கிறார்.

இன்று அவர் கோண்டாவில் கிழக்கு ஆசிமட விநாய கரின் பிரதம குருவாக இருந்து வருகிறார். அவரும், அவரது குடும்பமும் மேலும் பல்லாண்டு காலம் ஆசிமட விநாயகரின் அருளோடு சேவையைப் புரிவாராக!

பல்லாண்டு, பல்லாண்டு சீரும் சிறப்புடனும் வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

**M.A.HARI (B.A.Dip.IN.ENG.)**
(பிரபல ஆங்கில ஆசிரியர்)

### ...வாழ்க்கைக் குறிப்புக்கள்

| | | |
|---|---|---|
| | : | 03-03-1940 |
| | : | காசிவாசி செந்தில் நாதஐயர் |
| ...த்த | | சிவஸ்ரீ நடராஜ ஐயர் |
| | | கமலாம்பிகை |
| | : | காசிப் |
| | : | புன்னாலைக்கட்டுவன் வடக்கு, |
| | | யாழ்ப்பாணம். |
| ...ு | : | சிவஸ்ரீ க. துரைச்சாமிக் |
| | | குருக்கள் |
| குரு | : | நா. சிவசாமிக் குருக்கள் |
| ...ல்வி | : | புன்னாலைக்கட்டுவன் |
| | | அமெரிக்கன் மிஷன் பாடசாலை |
| | | புன்னாலைக்கட்டுவன் |
| | | ஆங்கில மகாவித்தியாலயம் |
| குரு | : | கைலாசநாதக் குருக்கள் |
| | : | 1963 ஆம் ஆண்டு |
| ...க்கள் | : | 'வேதாகம கிரியா ஜோதி' |
| | | 'ஆகம கிரியா திலகம்' |
| | | 'பிரதிஷ்டாமணி' |


**கங்கை கலாலயம்**
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.
உரிமையாளர்- கு.நவரத்தினம்.

20 வருட அனுபவம் மிக்க
**அப்பன் ஆட்ஸ்**
நாச்சிமார்கோயிலடி,
576, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

**PRIYA SUPER MARKET**
**பிரியா சுப்ப மார்க்கட்**
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
உரிமையாளர் - K. குலசிங்கம்

**பகீரதன்ஸ்**
நகைத் தொழிலகம்
குலஸ்தான், கொக்குவில் கிழக்கு.
உரிமையாளர் - சு. சண்முகநாதன்.

**சண்** வியாபார நிலையம்
ஐயனார் கோயிலடி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு.
உரிமையாளர்: J.சண்முகவடிவேல்

**அரசழப் பிள்ளையார்**
**களஞ்சியம்**
பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு.
உரிமையாளர்: N.மகேந்திரநாதன்.

**ஹப்பி** எலெக்றிக்கல்ஸ்
மின்சார, சைக்கிள் உபகரண
விற்பனையாளரும் ஒப்பந்தகாரரும்
K.K.S. வீதி, சுன்னாகம்.

**மணியம்**
வர்த்தக நிலையமும்
**பாலா** அரைக்கும் ஆலையும்
பலாலி வீதி, உரும்பிராய்.

**விநாயகர்**
பென்சி ஹவுஸ்
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.
அழகு சாதனப் பொருள்களை
மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**மதுஷா**
வைண்டிங் வேர்க் சொப்
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,
உரிமையாளர் - சி.சிறிதரன்.

**பாரதி**
வீடியோ & ஓடியோ
றெக்கோடிங் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவ'ல் சந்தி.

...ழ விநாயகர்
...தொழிற்சாலை
... வீதி, கோண்டாவில்,
...ளர்: க.நடனசிவம்

**அஜந்தாஸ்**
ரெக்ஸ் ரைல்ஸ்
54, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
சகலவிதமான புடைவைத்தினுசுகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம் அஜந்தாஸ்.

**தபேஷன்**
விவசாய மாளிகை
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.
உரிமையாளர் - செ.தவனேஸ்வரன்

**சுதா**
பல்பொருள் களஞ்சியம்
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.
பலசரக்கு, இரசாயனப் பொருள் விற்பனையாளர்.

...அன்பர்
...த்துகிறார்

*பாஸ்கரன் சிற்பாலயம்*
சு.பாஸ்கரன் ஆசாரி,
479 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கங்கா**
போட்டோ அன் பென்சி
கலர், கறுப்பு வெள்ளை படப்பிடிப்பாளர்,
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

**சிவம்**
சைக்கிள் வேர்க்ஸ்
ஸ்ரோர் முன்பாக, இருபாலை வீதி,
கோண்டாவில்.
உரிமையாளர் - இ.சிவனேசன்

...ஸ் ரெக்ஸ்,
...நயினார் கோயிலடி,
...னைக்கோட்டை.
...கள், அன்பளிப்புப் பொருள்கள்
...லயில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஐங்கரன்**
புடைவை அன் பென்சி ஹவுஸ்
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.

**தவராஜா**
எரிபொருள் நிரப்பு நிலையம்,
பலாலி வீதி, உரும்பிராய்.
உரிமையாளர் - து.தவராஜா

**N.S.திருநாவுக்கரசு அன் சன்ஸ்**
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.
சகல விதமான சிமெந்து, கம்பி வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.

## பொலிவுற்று வாழ்க!

இன்று ஷஷ்டியப்தபூர்த்தி விழாக் காணும்
புன்னாலைக்கட்டுவன் வடக்கு
ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தர்மகர்த்தா

''வேதாகம கிரிடா ஜோதி''
**சிவஸ்ரீ ந. சபாரத்தினக்குருக்கள்**
தம்பதிகளை

''பொன்போல மின்னிப் பூப்போல மலர்ந்து
பொலிவுற்று வாழ்க'' என்று வாழ்த்துகின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
(84300) யாழ்ப்பாணம்.

## வாழி நலம் சூழ வாழ்த்துகின்றோம் வாழி!

யாழ். மாநகர சபையின் செழுமை மிகு வளர்ச்சிப் பணிகளில் அயராது உழைத்து வடக்கு — கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளராகவும் பிரதிச் செயலாளராகவும் உயர் பதவி பெற்றிருக்கும்

**திரு. வே. பொ. பாலசிங்கம்**


அவர்களின் பணிகள் சிறப்புற்றோங்கவும் மேலும் பல உயர்வுகள் பெற்றிடவும் இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
செயலாளர், பணியாளர்கள்.

நெடுந்தீவுப் பிரதேச சபை.

(சி/15350)

## 2ஆம் ஆண்டு இதய அஞ்சலி



**செல்வன் பாலசுந்தரம் சுகந்தசொருபன்**
[கரணவாய் மத்தி]

பூவுலகில் 11–10–1979
பொன்னுலகில் 13–03–1999

திதி: 18–02–2001 [ஏகாதசி]

ஈராண்டல்ல இரு ஜென்மங்கள் .
கழிந்தனடா எமக்கு
பக்தனே உன் பக்தி கண்டு
தெய்வமும் தடுமாறியதோ!
பார் பார் என்றிருந்த தோற்றம் காணப்
பாரிற்கும் பொறுக்க முடியவில்லையே...
பகலவன் போல் வந்துதித்தாயே!
ஒளி வீசுமுன் மறைந்ததும் ஏனோ?
காரிருளிலல்லவா மூழ்குகின்றோம்
கண்கள் காணும் இடமெங்கும் தேடுகின்றோம்!
சுகந்தனே சுகந்தம் வீசிடுவாய் என்றிருந்தோம்
பாலகனாக பாதி மலருமுன் பறிபோனதேன்ன!
மறுஜென்மம் எடுத்து வந்தேனும்
எம்மோடு சேராயோ என ஏங்குகின்றோம்.
போதுமடா இந்தத் துன்ப வாழ்க்கை
எம்மையும் உன்னோடு சேர்த்துவிடு
எம் இதயத்தின் ஒளிச்சுடரே சுகந்தா
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
திரு. திருமதி. பாலசுந்தரம்
குடும்பத்தினர்.

ஆரியற்தறை,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(84167)

## சிவராத்திரியன்று பட்டிமன்றம்

யாழ்ப்பாணம், பெப். 18

கன்னாகம், கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரித் தினத்தன்று இரவு சிறப்பு நிகழ்ச்சிகளாக பாரதியார் கழகத்தினர் வழங்கும் பட்டி மன்றமும், 'செஞ்சோற்றுக் கடன்' நாடகமும் வில்லிசைக் கச்சேரி என்பனவும் இடம்பெறும்.

(க)

## மாணவருக்குஉதவ கலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், பெப். 18

கன்னாகம் - காந்தி பாலர் பாடசாலைச் சிறுவர்களுக்கு போசாக்கு உணவு வழங்குவதற்காக நிதி சேகரிக்கும் நோக்குடன் மகா சிவராத்திரி தினத்தன்று இரவு 7 மணிக்கு அங்குகலை நிகழ்வுகளை நடத்துவதற்கு நல நோன்பு நிலையம் ஏற்பாடு செய்துள்ளது

கடந்த வருடம் புரட்டாதி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாடசாலையில் காங்கேசன்துறை மற்றும் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்த சிறுவர்களே கல்விகற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

(க-6)

## கொடிகாமம் பாடசாலை வதிரியில்

தென்மராட்சி, பெப், 18

கொடிகாமம்திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வதிரி உடுப்பிட்டி வீதியில் உள்ள கேம்பிரிட்ஜ் கல்வி நிலையத்தில் காலை நேரப் பாடசாலையாக தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை இயங்கவுள்ளது.

வித்தியாலய அதிபர் ரி. கந்தையா இதனை அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## ஒரு வருட கால தையல் பயிற்சி

வலிகாமம் தெற்கு, பெப். 18

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள உடுவில் மல்வம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் 30பெண் பயிற்சியாளர்களுக்குவடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் கீழ் ஒரு வருட கால தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சியாளர்களுக்கு தினமும் 30 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

தையல் பயிற்சிகளுடன் கைப்பணி வேலைகள், மனையியல் சம்பந்தமான வேலைகள், விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்ற பணிகளிலும் இவர்களுக்குப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன

(க-152)

## வணிகர் மன்றம் நிதி உதவி

தென்மராட்சி, பெப். 18

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இடம்பெற்ற ஷெல் வீச்சுச் சம்பவத்தில் பெற்றோர், உடன் பிறப்புகளை இழந்துள்ள சாவகச்சேரி வர்த்தகரின் மகளுக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் 25 ஆயிரம் ரூபாவினை மரண சகாயக் கொடுப்பனவாக வழங்கவுள்ளனர்.

சற்குணேஸ்வரன்றொசானி என்ற இந்த பெண்பிள்ளை உரிய வயதையடையாத நிலையில் உள்ளதால் இக் கொடுப்பனவை சாவகச்சேரி வங்கியொன்றில் நிரந்தர வைப்பிலிட்டு அதற்கான சான்றிதழை அவரிடம் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## இன்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 18

மதுரை தமிழ்ச் சங்கத்தின் பண்டிதை ஸ்ரீமதி ந. பத்மாசனி அம்பாள் அருளிய புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10. மணிக்கு புலோலி பசுபதீசுவரர் ஆலய முன்றிலில் இடம்பெறும்.

ஓம் ஸ்ரீராம ஜெயம்
வண்ணை

## ஸ்ரீ வேங்கடேச வரதராசப் பெருமாள் தேவஸ்தானம் இலட்க்ஷார்ச்சனைப் பெருவிழா

ஷ்டிவிழா நிகழும் விக்கிரம வருடம் மாசிமாதம் 9 ஆம் நாள் (21-02-2001) புதன்கிழமை முதல் மாசி மாதம் 18 ஆம் நாள் (02-03-2001) வெள்ளிக்கிழமை வரை பத்துத்தினங்கள் நடைபெறும்.

தினமும்

| | | | |
|---|---|---|---|
| காலை | 8 30 | மணி | ஸ்நபன அபிஷேகம் விசேட பூஜை |
| பிற்பகல்: | 3. 15 | '' | சாயரட்சை பூஜை |
| | 3. 30 | '' | நியாசபூர்வ அர்ச்சனை ஹோமம் |
| | 4. 30 | '' | இரண்டாம் கால பூஜை |
| | 4. 45 | '' | நியாசபூர்வ அர்ச்சனை ஹோமம் |
| | 5. 45 | '' | அர்த்த ஜாம பூஜை நடைபெறும். |

பூர்த்தித்தினமான 02-03-2001 வெள்ளிக்கிழமை பிற்பகல் பொது உபயமாக நடைபெற இருப்பதால் அன்றைய தினம் சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய விரும்புபவர்கள் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

அடியார்கள் பூவகை, வில்வம், துளசி, அபிஷேக, ஹோம திரவியங்களை வழங்கி உதவலாம்.

(84270) – ஆதீன மகாசபை.

நீண்ட பாதை சென்று நிர்மலமானவரின்

## 45 ஆவது நாள் நீள நினைந்துருகல் அஞ்சலி

நெடுந்தீவுப் பிரதேசசபையின் உப தலைவர்
திரு. ம. ஜெயகாந்தன்
அவர்களது பாசமிகு தந்தையார்

**அமரர் குமாரவேலு மருதையினார்**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் 45 ஆம் நாள் நீங்கா நினைவுடன் நாமும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
செயலாளர், பணியாளர்கள்.

நெடுந்தீவுப் பிரதேச சபை.

(சி/15351)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 — 10 — 1937
மறைவு 13 — 02 — 1988

**அமரர் தி. சி. சண்முகலிங்கம்**
[இணுவில் கிழக்கு]

திதி: 18 – 02 – 2001

ஆண்டவனின் அடிநிழலில் அமர்ந்து
தூண்டா மணிவிளக்காய்த் துணைபுரியும் அன்புருவே!
உமையிழந்து ஆண்டு பதின்மூன்று ஆனதப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
சிவகாமியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பான மனைவி, பிள்ளைகள்,
சுற்றத்தார்.

'சுகந்தம்'
இணுவில் கிழக்கு.

(84181)

# பல்வேறு உயர் கல்வித் தெரிவுகளுக்கு மாணவரை வழிபடுத்துவது அவசியம்

**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

வளர்ச்சி பெற்ற நாடுகளில் வழிகாட்டல் சேவை என்பது மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. மாணவர்களுக்குச் சகல வழிகளிலும் அது வழிகாட்டுகின்றது. மாணவர் தமது கல்வித்துறையைத் தெரிவு செய்தல், தொழிலைத் தெரிவு செய்தல் என்று பல்வேறு அம்சங்களிலும் அந்த வழிகாட்டல் பரவிக் காணப்படுகின்றது. இதனால் மாணவர் தமக்குப் பொருத்தமான கல்வித் துறைகளையும், தொழிலையும் இலகுவாகத் தெரிவு செய்து முன்னேறிச் செல்கின்றார்கள். அதன் வழி அவர்களது சமூகமும் நாடும் உயர்வு பெற்றுக் கொள்ளுகின்றன.

ஆனால் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் இவ்வாறான சேவைகளின் பங்களிப்பு மிகவும் மந்த நிலையிலேயே காணப்படுகின்றது. எமது நாட்டிலும் இந்நிலையே. இது மிகவும் கவலைக்குரியது. மாணவர்களைச் சரியான வழியில் இட்டுச் செல்ல

## அதிபர், ஆசிரியர்களின் பாரிய பொறுப்பு இது

வேண்டியது கல்வியுலகின் தலையான கடமை. எமது நாட்டில் வழிகாட்டல் சேவை என்பது இல்லை என்பதால் நாம் எதுவும் செய்ய முடியாது என்று வாழாதிருக்கக் கூடாது.

கல்வியுலகைச் சேர்ந்தவர்களாகிய எம் அனைவரிடமும் மறுக்க முடியாத சமுதாயப் பொறுப்புண்டு. நாம் சேர்ந்த சமுதாயத்தை வழி நடத்த, வளர்ச்சி பெறச் செய்ய ஆவன செய்ய வேண்டியவர்கள் நாங்களே. எமது சமுதாயப் பொறுப்பை நாம் மறந்துவிடலாகாது; தட்டிக் கழிக்க முடியாது.

மாணவர்களை நன்கு புரிந்து வைத்துக் கொள்ளல் வேண்டும். அவர்களுககுள்ளே புதைந்துள்ள ஆற்றல்கள, திறன்கள், நாட்டங்கள் ஆகியவற்றை அறிந்து அவற்றை அவற்றினூடே வெளிக்கொணர்ந்து வளர்த்துவிட ஆவன செய்தல் வேண்டும். மாணவர்கள் பாடசாலை அதிபரையும் ஆசிரியர்களையும் மானசீகமாக நம்பி தங்கள் உயர்வுக்கும் சிறப்புக்கும் வழி காட்டுபவர்கள் இவர்களே என்ற நம்பிக்கையில் தம்மை முழுமையாக அவர்களிடம் கையளித்துள்ளார்கள். இது ஒரு பாரிய பொறுப்பு. "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்பது ஆன்றோர் கருத்து. அந்த இறைவன் ஸ்தானத்திலிருந்து மாணவர்களுக்குதவ வேண்டும். வழிகாட்ட வேண்டும்.

### மாணவர்களின் கல்வித் தெரிவு

மாணவர் தமது கல்வித் துறையினைத் தெரிவு செய்வதற்கு அதிபர், ஆசிரியர் தகுந்த முறையில் முழுமையாக உதவுதல் வேண்டும். பல்கலைக்கழகம் என்ற ஒரு நோக்குடன் அவர்களைச் செல்லவிடக் கூடாது. ஜப்பான் நாட்டவரின் துரித முன்னேற்றத்துக்கு அவர்கள் ஒரு கருமத்தினை ஆற்றுவதற்குப் பல தெரிவுகளை வைத்திருந்தமையும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது. ஒன்றில்லாவிட்டால் மற்றொன்று அதுவுமில்லாவிட்டால் இன்னொன்று எனத் திட்டமிட்டு கருமங்களை ஆற்றினர். நேரத்தை மிச்சப்படுத்தினர் முன்னேற்றங் கண்டனர்.

நாம் அப்படியல்ல. ஒரு கருமம் ஒரு வழி அது தவறின் மனமுறிவு. சங்கடம், கவலை இது தவிர்க்கப் படவேண்டும்.

மாணவர் கல்வியிலும் இவ்வாறே ஒரு துறை - விஞ்ஞானம், கலை, வர்த்தகம், ஒரு நோக்கம் - பல்கலைக்கழக அனுமதி. இங்கு ஒரு விடயத்தை ஞாபகத்தில் கொள்ளல் வேண்டும்: எல்லோருக்கும் பல்கலைக்கழக அனுமதி என்பது முடியாது. நடைமுறைச் சாத்தியம் அற்றது.

ஆகவே அடுத்து என்ன செய்யலாம் என்பதனை மாணவர்களுக்குத் தெளிவாக வழிகாட்ட வேண்டும். அங்கு அவர்களுக்குப் பல தெரிவுகள் கிடைக்கக் கூடியவாறு வழிகாட்டப்படல்வேண்டும்.

பல்கலைக்கழகக் கல்விக்கு அடுத்ததாக மாணவர்கள் கல்வியியற் கல்லூரிகளைத் தெரிவு செய்யக்கூடியதாக ஜி.சீ.ஈ. உ.த. வெட்டுப் புள்ளிகள் தீர்மானிக்கப்படுகின்றன. இவ்அடிப்படையில் மாணவர்கள் சிலர் கடந்த சில வருடங்களாக கல்வியயல கல்லூரிகளில் அனுமதி பெற்று வருகிறார்கள். கற்று வெளியேறி வேலையும் பெற்றுள்ளார்கள்.

ஆனால் தகுந்த வழிகாட்டல் இல்லாததனால் சில துறைகளில் அனுமதி பெறமுடியாத மாணவர்கள் தொகை அதிகமாக உள்ளதையும் சில துறைகளுக்கு மாணவர்கள் இல்லாத நிலையும் இங்கு அவதானிக்க முடிகின்றது.

உதாரணமாக யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற கல்லூரியில் எட்டுத துறைகள் உள்ளன. ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம், கணிதம், நடனம், சங்கீதம், சித்திரம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும் என்பன அவை.

இவற்றில் முதல் மூன்று துறைகளுக்குமே போட்டி நிலவுகின்றது.

ஏனைய துறைகளுக்கு மாணவர்கள் பற்றாக்குறையாக உள்ளது. காரணம் மாணவர் ஒருவர் தான் தெரிவுசெய்யும் துறை தொடர்பான பாடத்தினை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பது முக்கியமான தகுதியாகக் கொள்ளப்படுகின்றது. உதாரணமாக சித்திரப் பாடநெறியினைத் தெரிவுசெய்யும் மாணவர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திரப் பாடத்தினைக் கற்று சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அது இன்றேல் அவருக்கு அத்துறைக்கான அனுமதி மறுக்கப்படும். இவ்வாறே ஏனைய பாடநெறிகளுக்கும், ஆங்கிலப் பாடநெறிக்கு மட்டும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மிகத் திறமையான சித்தி 'டி' ஆங்கிலப் பாடத்தில் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்றுச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் பின்னர் நடைபெறும் தகுதி காண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். ஜி.சீ.ஈ. உ-த பரீட்சையி லும் குறிப்பிட்ட வெட்டுப்புள்ளி பெற வும் வேண்டும். நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும் என்ற துறைக்கு ஜி.சீ.ஈ. சா-த பரீட்சையில் திறமைச்சித்தி 'சி' பெறல் வேண்டும். ஜி.சீ.ஈ. உ-த பரீட்சையில் குறிப்பிட்ட வெட்டுப்புள்ளி பெறல் வேண்டும்.

ஏனைய சகல துறைகளுக்கும் க.பொ.த. உ-த பரீட்சையில் அத்துறை சார்ந்த பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இவற்றை நன்குணர்ந்து மாணவரது திறன் அறிந்து அவர்களை ஜி.சீ.ஈ. உ-த வகுப்பில் பொருத்தமான பாடங்களைத் தெரிவுசெய்து கற்பதற்கு அதிபர், ஆசிரியர் வழிகாட்டல் வேண்டும்.

### வழிகாட்டும் பொறுப்பு

எமது நாட்டில் எமது பிரதேசத்தில் வழிகாட்டல் சேவையினை ஆற்ற வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியரிடத்தும் அதிபரிடத்துமே உண்டு. கல்வியியல் கல்லூரிக் கல்வி என்பது மிகவும் பயனுடையது ஒன்று. வேலைவாய்ப்புடன் கூடியது. நவீன கல்விச் செல்நெறியுடன் கலந்தது. இதனை எமது சமூகத்தினர் முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்குப் பாடசாலைகள் நீர் ஊற்ற வேண்டும். அதிபர் ஆசிரியர்களால் அது நிறைவேற்றப்பட வேண்டும்.

ஜி.சீ.ஈ. உ.த. வகுப்பில் மாணவர் சேரும்போது தூர நோக்கில் ஆசிரியர்கள் சிந்தித்து அவர்களை நெறிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். தொடர்ந்து ஒரே சுற்றில் மாணவர்கள் அனைவரையும் ஆற்றுப்படுத்த முயற்சிக்கக் கூடாது.

மாணவர்கள் திறன் அறிவதுடன் இன்றைய செல்நெறியையையும் உணர்ந்து மாணவர்களுக்கு விளக்கி வழிகாட்டல் வேண்டும்.

பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர் தர வகுப்பில் மாணவன் சேர்ந்ததும் பல்கலைக்கழக அனுமதி என்ற அவர்களது உயர்வான குறிக்கோளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு ஏனைய தெரிவுகளுக்குமேற்ப வழிகாட்ட வேண்டியது அதிபர், ஆசிரியர்களது கடமை. இங்கு கல்விக் கல்லூரிகளை மாத்திரம் மனதில் கொள்ளாது மேலும் தெரிவுகளாக தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றவற்றையும் கருத்தில் கொள்ளல் பொருத்தமுடையது.

மாணவர்களது வழிகாட்டிகள் அவர்கள் போக்கினை ஒன்றுடன் மாத்திரம் மட்டுப்படுத்திவிடாது பல்துறை சார்ந்ததாக ஏற்பாடு செய்து கொள்ளல் பண்பும் பயனும் மிக்கது.

# வங்கி நியமனம் பெறுவதற்கு போலிச் சான்றிதழ் சமர்ப்பிப்பு

## பெண் ஊழியர் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.18

மக்கள் வங்கியின் யாழ்.மாவட்டக் கிளை ஒன்றில் அண்மையில் நியமனம் பெற்ற பெண் ஒருவர் போலிக் கல்விச் சான்றிதழ் சமர்ப்பித்தே இந்த நியமனத்தைப் பெற்றார் என்ற காரணத்துக்காக வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் மக்கள் வங்கிக்கு ஆள்கள் சேர்க்கப்பட்ட சமயம் பிரஸ்தாபப் பெண்ணும் அரசியல் கட்சியொன்றின் மூலம் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கிளை ஒன்றின் லிகிதராகப் பணிபுரிந்து வந்தார்.

நியமனம் பெற்றவர்களின் தகுதிச் சான்றிதழ்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி உறுதி செய்யும் வங்கியின் நடைமுறைப் படி -

பிரஸ்தாபப் பெண்ணின் சான்றிதழ்களும் அனுப்பப்பட்டிருந்தன.

இந்தப் பெண்ணின் தகுதிச் சான்றிதழ்கள் போலியானவை என உறுதிசெய்யப்பட்டதை அடுத்து வங்கி நிர்வாகம் அவரை வேலையிலிருந்து நிறுத்தியுள்ளது.

(உ-3-10-ரி)

# புகையிலையைத் தாக்கும் கரடி நோய்! குரங்கு நோய்!

இன்று விவசாயிகள் பல்வேறுபட்ட சிரமங்களை அனுபவிக்கின்றார்கள். அதில் ஒன்று புகையிலையில் காணப்படும் நோய் பற்றியதாகும். அடிக்கடி பத்திரிகையில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இந்த வேளையில் பல்கலைகழக விவசாய பீடம் விவசாயிகளுக்கு இடையில் சமூக தொடர்பொன்றை ஏற்படுத்தும்

## தமிழும் புலமும்

விதத்தில் ஜனவரி மாதம் ஒரு கருத்தரங்கை நடத்தியது. அதில் இந்த புகையிலைச் செய்கை விவகாரமும் ஒன்று.

அன்றைய கருத்தரங்கின்பின் பாதிக்கப்பட்ட புகையிலைச் செடி மண்ணுடன் கொண்டு வரப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. அதிலிருந்து புகையிலைச் செடியின் நோய்க்குக் காரணம் 'நிமட்டோட்' விலாங்குப் புழு என்னும் கிருமியின் தாக்கமாகும். இதை இந்தியாவில் 'நூல் புழு' என அழைப்பார்கள். இது விதையிலும் காணப்படும்; நாற்றிலும் காணப்படும்; மண்ணிலும் காணப்படும்.

### தாக்கத்தின் அறிகுறி

நாட்டிய கன்று வளர ஆரம்பிக்கும் போது உள்வளைந்து நீண்டு காணப்படும். படிப்படியாக வளரும் போது இலை முறுகல் அடைந்து காணப்படும். நெளிந்து காணப்படும். இலை விரிவடைய முடியாதிருக்கும். கன்று குட்டையாக இருக்கும். இலைப்பரப்பு குறைந்து காணப்படும். பருவத்துக்கேற்ற வளர்ச்சி இருக்காது. எவ்வளவு மருந்து தெளித்தாலும் திடகாத்திரமாக வளராது. இதை விவசாயிகள் பலவாறாக அழைப்பார்கள். 'குரங்குநோய்', கரடிநோய். இப்படி அதன் அமைப்பைக்கொண்டு இடத்துக்கிடம் விவசாயிகள் பலவாறாக அழைக்கின்றார்கள்.

மேலும் இம்முறை ஒக்ரோபர் மாதம் பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் நவம்பர் மாதம் காணப்பட்ட, காற்றின் தன்மைதான் இந்த நோய் மிக விரைவாக பயிர்களில் கூடுவதற்குக் காரணம் என்று - கூறியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும் இந்த நோயினால் பல விவசாயிகள் நாட்டிய ஒருமாதம், ஒன்றரை மாதங்களில் முழுக் கன்றுகளையும் பிடுங்கி அழித்து மீண்டும் நடுகை செய்ததைக் காணக் கூடியதாக இருந்தது. இந்த வேளையில் பல்கலைக்கழக அறிவுறுத்தலும் பயன்பட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. அது நன்மையும் தந்துள்ளது.

### ஆலோசனை

* நாற்றுமேடை தூய்மாக்கி முறை மூலம் தொற்று நீக்கப்பட்டதாக இருத்தல்.

* நாற்றுக்கள் நோய்த் தாக்கத்துக்கு உட்பட்டதாக இருத்தல் கூடாது.

* நடுகைக்கு முன்னர் நடுகுளியுள் 'பியூறடான்' போன்ற குருனல், பூச்சி, நாசினி அளவாகத் தூவி (இருதேக்கரண்டி மண்ணுடன் தூவி) கிளறிய பின் நாட்டவேண்டும். பொதுவாக கன்று நாட்டி 25ஆம் நாளுக்குப் பின்னரே மருந்தை தெளிப்பார்கள். ஆனால் இந் நோயைப் பொறுத்தவரையில் நம்முடைய குழந்தைகள் பிறந்தவுடன் தடுப்பூசி போடுவதைப் போல் புகையிலைக் கன்றுக்கும் ஆரம்பத் தடுப்பு முறை செய்யப்பட வேண்டி உள்ளது. நாட்டிய பின்னர் 'நெமட்

'விவசாயி'

டோட்', விலாங்குப் புழு இவற்றைக் கட்டுப்படுத்தக் கூடிய பெயர் கொண்ட நாசினிகளை கன்று முழுவதும் நனையும்படி விசிற வேண்டும்.

மேலும் கன்றுகளைச் சுற்றி கிளறும் வேளையிலும் குறுநல் நாசினிகளை தூவிவிடலாம். பொதுவாக விவசாயிகள் 'பியூறடான்' குறுநல் நாசினியை, 'குருடான்' அல்லது 'புருடான்' பெயர் கொண்டு கூறுவார்கள்.

மேற்கூறிய முறையைக் கைக்கொண்டபடியால் மீண்டும் நாட்டிய கன்றுகள் நன்றாக உள்ளன. இந்த முறைகளைக் கன்று நடும் விவசாயிகள் நன்மை கருதி தெரிவித்துக் கொள்கின்றேன்.

# யாழ்.சுகாதார சேவை குறித்து நாடாளுமன்றில் கேள்விக்கணை

யாழ்.போதனா ஆஸ்பத்திரி மற்றும் குடாநாட்டில் உள்ள ஏனைய மருத்துவ நிலையங்கள், மருந்தகங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் சுகாதார அமைச்சரிடம் பல்வேறு கேள்விகளை நாடாளுமன்றத்தில் எழுப்பியிருக்கின்றார்.

இந்தக் கேள்விகளுக்கு சுகாதார அமைச்சர் எதிர்வரும் செவ்வாய், வியாழக்கிழமைகளில் பதில் தரவேண்டும் என்று நாடாளுமன்ற நிகழ்ச்சி ஒழுங்குப் பத்திரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சுகாதார அமைச்சரின் வாய் மூல விடைக்காக யாழ்.எம்பியான தி. மகேஸ்வரன் எழுப்பியுள்ள பல்வேறு வினாக்களில் அடங்கியுள்ள அம்சங்கள் வருமாறு:-

★ யாழ் போதனா ஆஸ்பத்திரியில் நிலவும் வைத்தியர் மற்றும் நிபுணர்கள் பற்றாக்குறை மற்றும் பணியாளர் பற்றாக்குறை அவற்றால் ஏற்பட்டுள்ள மருத்துவ அவலங்கள், சீர்கேடுகள்.

★ மருந்துப் பற்றாக்குறை விலை அதிகரிப்பு, அவற்றை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்வதில் உள்ள கெடுபிடிகள், கஷ்ரங்கள்.

★ யாழ்.ஆஸ்பத்திரியிலும் ஏனைய ஆஸ்பத்திரிகளிலும் உள்ள மருத்துவ வசதிக் குறைபாடுகள், அவற்றை நிவர்த்தி செய்வதில் காட்டப்படும் அசண்டையீனம்.

★ நோயாளர் படுக்கைகள், சக்கர நாற்காலிகள் பற்றாக்குறை.(உ)

# கிழக்கில் பொங்கு தமிழ்

மட்டக்களப்பு, பெப்.18

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் "பொங்கு தமிழ்" எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டம் மற்றும் கலை நிகழ்வுகள் சிறப்பு நிகழ்வுகளாக இடம் பெறும் என கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7-21)

# பெப்ரவரி மாத நிவாரணம் அடுத்த வாரம் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.18

பெப்ரவரி மாத உலர் உணவு நிவாரணம் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நிவாரணம் வழங்குவது தொடர்பான மீளாய்வு வேலைகள் பூர்த்தி அடையாமலிருப்பதால் ஏற்கனவே நிவாரணம் பெற்ற ஒரு லட்சத்து 15 ஆயிரம் குடும்பங்களுக்கும் இந்த நிவாரணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சில ப.நோ.கூ.சங்கங்களில் அரிசி கையிருப்பில் இல்லாதமையினால் ஜனவரி மாத நிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-5)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

2 15/9, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புஸ்ப ராசா மகேஸ்வரன் என்பவரது வி.அ.அ. (இல.0901019335) இராசாவின் தோட்டம் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (84275)

கைச்செயின் ஒன்று 02.02.2001 வெள்ளிக்கிழமை அன்று கலட்டிச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கலட்டிச் சந்தியில் உள்ள வேள்ஸ் கொமினிகேசனில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P.021-2188 (84287)

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த முத்து சத்தியபாமா என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.377290569V), விசேட அடையாள அட்டை என்பன 15.02.2001 அன்று யாழ்ப்பாணத்திற்கும் முத்திரைச் சந்தைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து முத்திரைச் சந்தையிலுள்ள பற்றிக் கடையில் ஒப்படைக்கவும். (84299)

முள்ளி வீதி, அரியாலை என்னும் முகவரியைச் சேர்ந்த குலசிங்கம் செல்வறுபராணி என்பவரின் விசேட அ.அட்டை 12.02.2001 அன்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல.392, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (வஸ்தியன் சந்தி) என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (84306)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1965ஆம் ஆண்டு பிறந்த, பூசம் நட்சத்திரம் கிரகபாவம் 16 உடைய செவ்வாய் தோசமற்ற 5'4" உயரமுடைய A/L சித்தியடைந்த சுவிஸ் நாட்டில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. சீதனம் ஓரளவு எதிர்பார்க்கப்படும். தொடர்பு: விள. இல.1215, மே/பா. உதயன். (84277)

அடுத்த மாதம் இலங்கை வர இருக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38 வயது, 5'6" உயரமான லண்டன் பொறியியலாளர் மணமகனுக்கு அழகும், கல்வித் தகைமையுமுடைய மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: விளம்பர இல. 1213, மே/பா. உதயன். (84225)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நற்குணமுள்ள சைவபோசன, செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு 22-28 வயதுக்கிடையில் சைவபோசன மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: விள.இல.1216, மே/பா. உதயன். (84302)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

1 1/2 மாதம் நிரம்பிய கலப்பின அல்சேசன் பெண் நாய்க்குட்டி ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அநிதநீபானந்தன், பராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில். (84272)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

தினமும் இறைச்சிக் கோழிகள் (புறொயிலர், கல்பேட், சேவல்) சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சேன்றர் வளவு) முத்திரைச் சந்தி, நல்லூர். (84168)

இறைச்சிக்கோழி (BROILER), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல:15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (84257)

சுத்தம் செய்யப்பட்ட BAIRAHA FARM புறொயிலர் இறைச்சிக்கோழி, CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS என்பன பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: வறணி, 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (84263)

## வெளிவந்துவிட்டது

சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள் தொகுத்த சந்தியா வந்தனம் ஆத்மார்த்த சிவபூஜை, கிரண்ய சிராத்தம், கிடைக்கும். இடம்: தர்ம சாஸ்தா குருகுலம், இணுவில். (84308)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிங்கர் DOUBLE DOOR குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. மற்றும் சிறந்த முறையில் குளிர்சாதனப்பெட்டிகள் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படும். தொடர்பு: ராகவேந்திர ஆலயம், நல்லூர். (83982)

45 நாள்கள் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டிகள் (ஆண் தனிக்கறுப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. குரைத்தினம், மடத்தடி, கந்தரோடை, சுன்னாகம். (84268)

YAMAHA PORTA SOUND ELECTRIC ORGAN - JAPAN MODEL P.S.S. - 390, SETTEE க்கு விரிக்கும் CARPET, CUSHION COVER மணவறை பாவிப்புக்கு உகந்தது. தொடர்பு: 28, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (84254)

நல்ல நிலையிலுள்ள C-50 ரக CHALY HONDA (தனிப்பாவனையில் உள்ளது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மாலை 3.00 மணிக்கு பின் இல.45, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம். (84295)

புறொயிலர் (விலை 180/-), கல்பேட் (விலை 160/-) மலிவு விலையில் விற்கப்படும். 334, K.K.S. வீதி, (வீட்டில்) குணம் றொட்டிக் கடைக்கு அருகில், சிவன்கோயிலடி, யாழ்ப்பாணம். (84305)

97, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியில் 6 பரப்புக் காணி வீட்டுடனும், 195, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி மாடிவீட்டுடனும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: N. சத்தியரூபன், 354, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/15361)

லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கில் 3 1/2 பரப்புக் காணி கிணறு, சுற்றுமதில் மற்றும் பிரயோசனங்களுடன் விற்பனைக்கு உண்டு. (மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி அருகில்) தொடர்பு: மா.திருச்செல்வம், லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். (84297)

கமரா மினோல்ட்டா (MINOLTA XG1) WITH FLASH GUN, ZOOM LENCE, WIDE ANGLE LENS, எக்கோடியன் [ACCORDION HORNER 40 BASS] இன்வேட்டர் [INVERTOR 300 WATTS], ரேப் றெக்கோடர் [2 DOOR, AIWA] தொடர்பு: 18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 2439, 3252. (C/15357)

ஒடியோ டெக் (ஜப்பான்) 1.TECHNIC M 215, WATT MASTER [JAPAN], சோலர் [SOLAR PANAL 8L], நீர் இறைக்கும் இயந்திரம் (றொபின் EY-13, வில்லியஸ் M-12), CAR-கார் VAUX HALL VIVA ஒரு Series. தொடர்பு: 18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.2429, 3252. (C/15358)

கொழும்பில் இருந்து பொருள்கள் வந்த வெற்றுக் "காட் போட்" பெட்டிகள் (பெரிய பெட்டி) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 39, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (மக்கள் வங்கிக்கு அருகில்) (84259)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். அண்ணா, ஸ்ரேஷன் றோட், இணுவில். (C/15146)

## தேவை

வீட்டில் தங்கி ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் செய்வதற்கு பணிப் பெண் தேவை. தொடர்பு: விள.இல.1212, மே/பா உதயன். (84219)

அரசாங்க தொழில் புரியும் குடும்பம் ஒன்றிற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்கு வீடு தேவை: நகரை அண்டிய பிரதேசம் விரும்பத்தக்கது. பொருத்தமான வாடகை வழங்கப்படும். தொடர்பு: விள.இல.1214, மே/பா உதயன். (84269)

சிறு பண்ணை அமைப்பதற்கு தகைக்கு நிலம் தேவை. திருநெல்வேலி, இணுவில், உடுவில், சுன்னாகம், மல்லாகம் மற்றும் தெல்லிப்பழைப் பகுதிகளில் விரும்பத்தக்கது. தொடர்பு: விள.இல.1209, மே/பா. உதயன். (84076)

## திருமண சேவை

இந்து, 1962ஆம் ஆண்டு பிறந்த, படித்த, அழகுள்ள பெண்ணுக்கு சிறந்த குணம் பொருந்திய மணாளனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: ராகவேந்திர ஆலயம், நல்லூர், யாழ்ப்பாணம். (84030)

சைவ கௌரவ, சுயதொழில் செய்யும், 1970இல் பிறந்த மணமகனுக்கு பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர். மற்றும் சகல இன மத ஆண், பெண் இருபாலருக்கும் ஜாதகங்கள் உள்ளன. தொடர்பு: ராகவேந்திர ஆலயம், நல்லூர். (83981)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 40 வயதுடைய சைவபோசன ஆசிரியருக்கும், 35 வயதுடைய பாகடருக்கும் கிரகபாவம் குறைந்த அழகிய மணப்பெண்களும், 33 வயதுடைய பட்டதாரி மணப்பெண்களுக்கு Sponser இல் வெளிநாடு அழைத்துச் செல்லக் கூடிய மணமகன்களும் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தருகின்றீ தொடர்பு கொள்ளவும். விள.இல.1207, மே/பா. உதயன். (83963)

## இரு விபத்துக்கள்; இருவர் காயம்

யாழ்ப்பாணம் மற்றும் இருபாலை பகுதிகளில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற இரண்டு வீதிவிபத்துச் சம்பவங்களில் இருவர் காலில் முறிவு ஏற்பட்டு காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி நாவலர் சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்லக்கண்டு ஜெகதீசன் (வயது 34) என்பவர் காயமடைந்தார். மினி பஸ் நடத்துநரான இவர், வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த அந்த பஸ்ஸில் இருந்த வேலையில் ஈடுபட்டிருந்த வேளை பின்னால் வந்த கார் இடித்து காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இருபாலையில் இரண்டு மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதுண்ட விபத்தில் ஒரு மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரும், குருநகரைச் சேர்ந்தவருமான சாள்ஸ் விஜயன் (வயது 38) என்பவர் காயமடைந்தார். (க-15)

### மேசைப்பந்தாட்ட அணிகள் தெரிவு

யாழ்.மாவட்ட மேசைப் பந்தாட்ட விளையாட்டின் ஆண், பெண் பிரிவு அணிகளைத் தெரிவு செய்வதற்கான நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (உ-3)

### தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுடைய ஆண் விற்பனையாளர் தேவை. நேரில் வரவும்.

த. சங்கரப்பிள்ளை அன்சன்ஸ்
புடைவை, சில்லறை, மொத்த விற்பனையாளர்,
(84222) யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விமலாதேவி இராமநாதன்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி இராமநாதன் (16.02.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிபிள்ளை திருமதி சுகிர்தமலர் அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பொன்னுச்சாமி தம்பதிகளின் அன்பு மருமகளும், பொன்னுச்சாமி இராமநாதன் (Retired District Manager- Housing Developement Authority) அவர்களின் பாசமிகு மனைவியும், சுந்தரேஸ்வரி, ஜெகதீஸன், சுசீலா, சகுந்தலா, பத்மராணி, ருக்மணி, மாலினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானசேகரம், சத்தியபாமா, ஜெயதேவன், இராமநாதன், யோகரட்ணம், Dr.துரைசாமி, திருமதி பத்மாவதி முருகையா, திருமதி சத்தியவதி, தேவராஜன், சத்தியநாதன், திருமதி திலகவதி கனபதிப்பிள்ளை, இந்திரநாதன், Dr.தர்மவதி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி ராதிகா, திருமதி தேவிகா, றொமேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரகுராஜ், முருகவேள் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:
ச.ஜெகதீஸன் (தம்பி)

*543, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (54294)

## திருமதி அன்னலட்சுமி சிவானந்தம்

**(பிள்ளை அக்கா)**

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சிவானந்தம் 13.02.2001 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் சிவானந்தம் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், எழிலி (இந்தியா), துளசி (பிரான்ஸ்), அமரர் அகிலி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் கந்தசாமி, அமரர் நடராஜா, சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம் (லண்டன்), தங்கலட்சுமி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோகநாதன் (கனடா) அவர்களின் மாமியாரும், கலாநிதி (லண்டன்), திலகவதி, இராஜலட்சுமி, Dr.லோகேஸ்வரி (லண்டன்), சிவபாதசுந்தரம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும், தாரணி (அவுஸ்திரேலியா) அவர்களின் பெரியதாயாரும், பிரபாநிதி (லண்டன்), சத்தியநிதி (லண்டன்), சுபதா (நோர்வே), சுரேஸ் (ஜேர்மனி), மதீஸ்வரன், மோகனப்பிரியா, Dr.தனுப்பிரியா (லண்டன்), கிருஷ்ணப்பிரியா (லண்டன்), கலாதீபன், சத்தியதீபன், ஞானதீபன், தீபாரணி, தட்ஷாயினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.02.2001) திங்கட்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*சேச் லேன்,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (84307)

தகவல்
நா.சுப்பிரமணியம் (சகோதரன்)

## பொன்னம்பலம் புனிதம்மா

கரம்பன் கிழக்கு காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் புனிதம்மா (15-02-2001) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், ரேவதியம்மா, தவரட்ணம், ரேதமலர், நகுலதாஸ் (ஜேர்மனி), குமரதாஸ் (ஜேர்மனி), யோகதாஸ் (சுவிஸ்), வசந்தமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரன், பாலா, உருத்திரன், மீனா, வரதா, விஜயா, நித்தியானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், நாகம்மாவின் சகோதரியும், கனகதிப்பிள்ளையின் (பஞ்சாட்சரம்) மைத்துனியும், ராஜவதி, ரட்ணவதி, கருணாவதி, முனீஸ்வரன், சுந்தரவதனி, வசந்தகுமார், ரமணகுமார், யஜிதா, சரன், கவிதா, அஜந்தா, அஜந்தன், கஜன், வினிதா, வினோத், விவேக், விஜித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-02-2001) ஞாயிற்றுக் கிழமை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானாம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*44/6, கல்லூரி ஒழுங்கை,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.* (84303)


தகவல்:
பொ.பரமேஸ்வரன் (மருமகன்)


# காணத் தவறாதீர்கள்

## யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக

மாபெரும் GYMNASTICS (ஜிம்னாஸ்ரிக்) கண்காட்சி

ஆளுமை சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை மாணவர்களும் யாழ்.ஜிம்னாஸ்ரிக் அக்கடமி மாணவர்களும் இணைந்து வழங்கும்



**GYMNASTICS**

இடம்: மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கு
காலம்: இன்று (18.02.2001) ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.00 மணி

அன்பளிப்பு: 20/=, 10/=

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடற்கல்வி மாணவர் மன்றம்.
*உடற்கல்வித்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*
(C/15327)

## இரு ஆண்டுகளில் முதன் முறையாக
# அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் ஈராக் மீது கடும் வான் தாக்குதல்!

வாஷிங்ரன், பெப். 18

கடந்த இரண்டு வருட காலத்தில் முதன் முறையாக ஈராக் மீது அமெரிக்க பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

ஈராக்கியத் தலைநகர் பாக்தாத் அருகில் அமைந்திருந்த இராணுவக் கட்டுப்பாட்டுத் தளங்கள் மீது அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் 25போர் விமானங்கள் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அமெரிக்கத் தற்காப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஐ நா தடையைக் கண்காணிக்கும் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் மீது ஈராக்கின் விமான எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரித்ததாலேயே கடும் தாக்குதல் நடத்தியதாக— அமெரிக்கத் தற்காப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

1990 ஆம் வருடம் குவைத்தை ஈராக் ஆக்கிரமிக்க மூயற்சித்ததை அடுத்து, ஈராக் மீது ஐ.நா தடைகளை விதித்துள்ளது.

இந்தத் தடைகளில் ஒன்றான வான் வெளியை உபயோகிப்பதற்கான தடையை ஈராக் மீறாமல் இருப்பதற்காக; அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் அப்பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

அவ்வாறு கண்காணிக்கும் விமானங்கள் மீது ஈராக் எதிர்த்தாக்குதல்கள் நடத்துவதாக அமெரிக்காவும், பிரிட்டனும் குற்றஞ்சாட்டி வந்தன.

இரு வருடங்களுக்கு முன்னரும் ஈராக் மீது இதே போன்றதொரு தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஒ-7)

# அமெரிக்கா மீது எதிர்த்தாக்குதல்; ஈராக் அதிபர் சதாம் எச்சரிக்கை!

பாக்தாத், பெப். 18

அமெரிக்கா மீது எதிர்த் தாக்குதல் நடத்தப்போவதாக ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பாக்தாத் அருகே அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் நடத்திய வான்தாக்குதல்களுக்குப் பதிலடியாக தாக்குதல் நடத்தப் போவதாக சதாம் தெரிவித்தார்.

இறுதிவெற்றி கிட்டும் வரை இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் மூலம் சண்டையிட உறுதி பூண்டுள்ளதாகவும்—

பாக்தாத் மீதான தாக்குதலுக்கு இஸ்ரேல் உதவி



செய்துள்ளதாகவும். ஈராக் அதிபர் கூறியுள்ளார்.

அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் நடத்திய தாக்குதல் ஆத்திரமூட்டுவதாக சதாம் ஹுசைன் தலைமையிலான ஈராக்கிய புரட்சித் தலைமைச் சபை தெரிவித்துள்ளது.

பாக்தாத் மீதான தாக்குதலின் போது ஏற்பட்ட சேதங்களை ஈராக் தொலைக்காட்சி தொடர்ந்து ஒளிபரப்பி வருவதாகவும்

அமெரிக்க எதிர்ப்புக்கருத்துகள் தொலைக்காட்சியில் பரப்புரை செய்யப்படுவதாகவும்

ஈராக்கில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டதாக ஈராக் தொலைக்காட்சி அறிவித்தது.

(ஒ–6)

## மெக்ஸிக்கோவின் தலைநகரில்
# தன்னினச் சேர்க்கையாளர்கள் காதலர் தினத்தில் திருமணம்

மெக்ஸிக்கோசிற்றி, பெப். 1

மெக்ஸிகோவில் கடந்த 14 ஆம் திகதி 209 இக்கும் மேற்பட்ட தன்னினச் சேர்க்கையாளர்கள் காதலர் தினத்தையொட்டி திருமணம் செய்து கொண்டனர்.

இத்தகைய திருமணங்களுக்கு மெக்ஸிகோவில் சட்ட அங்கீகாரம் இல்லாத போதும், இவர்களது திருமணக் கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாக நடந்தது.

கத்தோலிக்க நாடான மெக்ஸிகோவின் தலைநகரில் செயற்படும் அரசு கலாசார நிலையத்தின் வெளியே திரண்ட தன்னினச் சேர்க்கை ஜோடிகள், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் விசுவாசமாக இருப்பதாக பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தினர்.

திருமண விழா ஏற்பாட்டாளர்கள், அந்த ஜோடிகளுக்குத் வாழ்க்கைப் பங்காளிகள் அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கினர்.

(ஒ)

# தி. மு. கழகக் கூட்டணியில் புதிய தமிழகம் கட்சி இணைந்தது

சென்னை, பெப். 18

தமிழகத்தில் தி. மு .க. தலைமையிலான கூட்டணியில் புதிய தமிழகம் கட்சி சேர்ந்துள்ளதாக தி. மு. க. தலைவரும், தமிழக முதல்வருமான கருணாநிதி அறிவித்துள்ளார்.

உலக அரங்கில்

தென் மாவட்டங்களில் கணிசமாக - தேர்தல் முடிவுகளை மாற்றும் அளவில் - வாழும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள புதிய தமிழகம் கட்சி கடந்த தேர்தலில் அ.தி மு க கூட்டணியில் இணைந்து போட்டியிட்டது.

தற்போது வன்னியர் இனத்தவர்களின் கட்சியாகக் கருதப்படும் டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி அ. தி. மு. க. கூட்டணியில் சேர்ந்துள்ளதால் — தாழ்த்தப்பட்டவர்களுக்கு வன்னியர்களுக்கும் காலம் காலமாக நிலவிவரும் பகையுணர்வின் காரணமாக—புதிய தமிழக் கட்சி தி. மு. க. கூட்டணியில் இணைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

புதிய தமிழகம் கட்சியை ஆரம்பிக்க முன்னர் அதன் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தி.மு.க வின் மாவட்டச் செயலாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

(ஒ-7)

## போதைப்பொருள் தயாரிக்க உதவும்
# பெருமளவு ‘கொக்கா’ செடிகளை கொலம்பிய இராணுவம் அழித்தது

பகோட்டா, பெப். 18

கொலம்பியாவில் போதைப் பொருள் தயாரிக்கப்பயன்படும் கொக்கா செடிகள் பெருமளவில் அழிக்கப்பட்டதாக அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் உதவியுடன் கொலம்பியாவில் பயிரிடப்பட்ட கொக்கா செடிகளில் 25 சதவீதமானவை கடந்த 2 மாதங்களில் அழிக்கப்பட்டதாக இராணுவம் கூறியுள்ளது.

சிறிய ரக ஹெலிகள் மூலம் கொக்கா செடிகள் மீது மருந்து தூவி அழிக்கப்பட்டது.

இதில் பயன் தரும் பயிர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் முறையிட்டுள்ளனர்.

போதைப்பொருள் தயாரிப்பினாலேயே கொலம்பியா அதிக வருமானத்தைப் பெறுகிறது என்றும் —

‘கொக்கெய்ன்’ என்ற போதைப்பொருளைத் தயாரிக்கப் பயன்படும் கொக்கா செடிகளை கொலம்பியா ராணுவம் அழித்ததாகக் கூறுவது சந்தேகத்துக்குரியது என்றும் பக்கச் சார்பற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

[ஒ-7]

# ரஷ்யாவுடன் இந்தியா ஒப்பந்தம்

புதுடில்லி, பெப். 18

அதி நவீன டி– 90 டாங்கிகளை ரஷ்யாவிடமிருந்து இந்தியா வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கடந்த வியாழக்கிழமை கைச்சாத்திட்டன.

இந்திய இராணுவத்தின் டாங்கிப்படையில் பழைய டாங்கிகளே பயன்படுத்தப்படுவதாகக் கூறப்பட்டு வந்தது 3220 கோடி ரூபா மதிப்புள்ள புதிய டாங்கிகள் வாங்கப்படுவதையடுத்து இவ்வாறான முறைப்பாடுகள் அகலும் என்று நம்பப்படுகிறது

# இந்தோனேசிய அட்சய் பகுதியில் யுத்த நிறுத்தம் மேலும் நீடிப்பு

ஜெனிவா, பெப். 18

இந்தோனேசியாவின் அட்சய்ப் பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள யுத்தநிறுத்தம் காலவரையறையின்றி மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் இந்தோனேசிய அரசின் பிரதிநிதிகளுக்கும், அட்சய் தீவிர வாதிகளுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் யுத்த நிறுத்த நீடிப்புக் குறித்து உடன்பாடு காணப்பட்டது.

பேச்சின் முடிவில் இருதரப்பினரும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், இருதரப்பும் பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்தி, தொடர்புகளை விரிவுபடுத்த உறுதி கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டில் உள்ள 40 லட்சம் அட்சய் இனமக்கள் தமது பிரேதேசத்தின் சுதந்திரத்துக்காகப் போராடி வருகின்றவர்.

ஆனால் சுதந்திரத்துக்குப் பதிலாக முக்கிய விவகாரங்களில் கூடுதல் அதிகாரம் மட்டும் வழங்க இந்தோனேசிய அரசு முன்வந்துள்ளது.

[ஒ-7]

## இஸ்ரேலிய எதிர்க்கட்சி தலைவரான
# எகுட் பராக்கை அமைச்சராக்க பிரதமர் ஷெரோன் சம்மதம்

இஸ்ரேலில் அடுத்த பிரதமரான ஏரியல் ஷெரோன் முன்னாள் பிரதமர் எகுட்பராக்குக்கு பாதுகாப்பு அமைச்சர் பதவியை வழங்க முன்வந்துள்ளார்.

பிரதமர் தேர்தலில் வெற்றி பெற்ற ஷெரோன், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையில் தேசிய கூட்டணி அரசொன்றை அமைக்க முயற்சித்து வருகிறார்.

இந்த முயற்சியில் எகுட் பராக்கின் தொழிலாளர் கட்சியுடன் தனது லிகுட் கட்சி கூட்டணி அமைத்து ஆட்சியமைக்க ஷெரோன் பேச்சுக்களை மேற்கொண்டார்.

அதன் பயனாக பராக்குக்கு பாதுகாப்பு அமைச்சர் பதவியும், அவரது தொழிலாளர் கட்சியின் முக்கிய தலைவரும் முன்னாள் பிரதமருமான சிமோன் பெரஷுக்கு வெளியுறவுத் துறை அமைச்சர் பதவியும் வழங்க ஷெரோன் முன்வந்துள்ளார்.

(ஒ-7)

# பூகம்ப மரணம்; அதிகாரபூர்வ அறிவிப்பு

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆயிரம் என்று மாநில அரசு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

அத்துடன் 800 முதல் 1000 பேர் வரை காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## அரசியல் தஞ்சம் கோருவோரால்
# நியூசிலாந்து அரசுடன் ஆஸ்திரேலியா பிணக்கு

சிட்னி, பெப். 18

அரசியல் தஞ்சம் கோரி நாட்டுக்குள் நுழைபவர்கள் தொடர்பாக ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளிடையே பிணக்கு ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் அருகருகே உள்ள நாடுகள். இந்த இரு நாடுகளிடையேயான நட்புறவு ஒப்பந்தத்தின்படி ஒரு நாட்டில் இருந்து அடுத்த நாட்டுக்குச் செல்ல ‘விஸா’ பெற வேண்டிய தேவையில்லை

நியூசிலாந்துக்குள் நுழைந்து அந்த நாட்டின் குடியுரிமை பெற்றுக்கொள்வது இலகுவானதாகும்.

இதனைப் பயன்படுத்தி இலங்கையர்கள் உட்பட பல வெளிநாட்டினரும், முதலில் நியூசிலாந்துக்குள் நுழைந்து அங்கு குடியுரிமை பெற்றுக் கொள்கின்றனர்.

சிறிது காலத்தின் பின்னர் அங்கிருந்து ‘விஸா’ இல்லாமல் ஆஸ்திரேலியாவுக்குள் அவர்கள் இலகுவாக நுழைந்து அரசியல் தஞ்சம் கோருகின்றார்கள்.

ஆஸ்திரேலியாவுக்குள் இப்படி நுழைந்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்தைத் தாண்டிவிட்டதாக கூறப்படுகிறது.

இதனால் ஆஸ்திரேலியா கோபமடைந்துள்ளது .

நியூசிலாந்தின் குடியுரிமைக் கொள்கைகளை மாற்றி இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்று ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பிலிப்ருடாக் நியூசிலாந்தை கோரினார்.

ஆனால் இதற்கு ஒத்துக்கொள்ளாத நியூசிலாந்து அரசு இத்தகைய பிரச்சினைகளுக்காக குடியுரிமைக் கொள்கையை மாற்ற முடியாது என்று தெரிவித்துள்ளது

இதனால் இரு நாடுகளிடையே புகைச்சல் ஆரம்பமாகியுள்ளது.

# எல்சல்வடோரில் 10 லட்சம் பேர் வீடிழப்பு

சான்சல்வடோர், பெப். 18

எல்சல்வடோரில் கடந்த மாதமும், கடந்த வாரமும் ஏற்பட்ட சக்தி வாய்ந்த இரண்டு பூமியதிர்ச்சிகளால் 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வீடுகளை இழந்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

நாட்டின் சனத்தொகையில் 25 சதவீதமான மக்கள் தங்குவதற்கு கூரைகூட இல்லாமல் நிர்க்கதியாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஒ)

பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்காக

# யாழ். மக்கள் மற்றும் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸைச் சந்திக்கலாம்

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு. புனரமைப்பு மற்றும் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ். மக்கள் மற்றும்பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேரில் சந்தித்து தமது பிரச்சினைகளை எடுத்துக் கூற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண மக்களின் தனிப்பட்ட பிரச்சினைகளை பிரதி புதன் மற்றும் வியாழக்கிழமைகளிலும் பொது அமைப்புக்களின் பிரச்சினைகளை பிரதி செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை அமைச்சரிடம் எடுத்துக் கூறி உரிய தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒவ்வொருவரும் தமது பிரச்சினைகளை எழுத்துமூலமாக சமர்ப்பிக்கும்படியும் — உரிய ஆவணங்கள் தேவைப்படுமாயின் அவற்றை இணைக்கும்படியும்— தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மூடப்படுவதாக அறிவிக்கப்பட்ட பாடசாலைகளை இயக்க முடிவு

யாழ்ப்பாணம், பெப். 18

மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து வடமராட்சி கிழக்கில் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்ட பாடசாலைகளை வேறு பாடசாலைகளில் தனித்து இயங்கவைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சிக் கல்வி வலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளை அறிவித்துள்ளார்.

இதன்படி நாகர்கோயில் அ. மி த. க. பாடசாலை குடத்தனை அ.த. கவிலும்—

செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும்—

மாமுனை அ. த. க பாடசாலை புற்றளை அ. த. க விலும்—

உடுத்துறை ம. வி. அம்பன் அ. த. கவிலும்.

மருதங்கேணி இ. த. க பாடசாலை அல்வாய் வடக்கு அ. த. கவிலும்—

தாளையடி றோ. க பாடசாலை புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும்—

ஆழியவளை சி. த. க பாடசாலை மற்றும் செம்பியன்பற்று றோ. க. த பாடசாலை என்பன குடத்தனை அ. மி. த. கவிலும்—

இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைகள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பந்தப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணித்ததன் பேரில் கலந்துரையாடல் நடத்தப்பட்டு பாடசாலைகளை மூடும் தீர்மானம் ரத்துச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா, பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர், இடம்பெயர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கப் பிரதிநிதிகள், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-7)

சிவராத்திரி தினத்தன்று

# சமாதானம் வேண்டி பிரார்த்தனை செய்க!

## இந்து சமயப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப் 18

சிவராத்திரி தினமான எதிர்வரும் புதன்கிழமையன்று நாட்டில் சமாதானம் வேண்டி அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என இந்து சமயப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது நாட்டின் விடிவை தெய்வீகத்தின் மூலமே பெற முடியும். சகல மதத் தலைவர்களும் இன்று இதனை உணர்ந்துள்ளனர்.

சிவப்பரம்பொருளின் மகோன்னதமான மகா விரதமாக அனுஷ்டிக்கப்படும் சிவராத்திரி தினத்தில் எமக்கிடையில் உள்ள குரோதம், அகந்தை, பகைமை ஆகியவற்றை மறந்து அனைவரும் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும்;

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் எமது இந்தப் பெருமுயற்சிக்கு மனப்பூர்வமாக தமது ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று நம்புகின்றோம்.

ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்ய முடியாதவர்கள் தத்தம் வீடுகளில் இருந்து அன்றைய தினம் பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிவராத்திரியன்று மாலை 6 மணிக்கு சகல ஆலயங்களிலும் கண்டாமணியை ஒலிக்கச் செய்து பிரார்த்தனையை ஆரம்பிக்க வேண்டும். களியாட்டங்கள் சினிமாப்படம் பார்ப்பது போன்ற செயல்களில் எவரும் ஈடுபடக் கூடாது என்றும் சகலரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது நாட்டின் பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரம் மீளவும் பொலிவு பெற வேண்டும் என்று இந்நாளில் பிரார்த்திப்பதுடன் சிவராத்திரி நாளை புனித நாளாகப் பேண சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் — என்றுள்ளது. (ம)


## ஆஞ்சநேயர் பப்படம்

சுகாதாரமான முறையில் சுத்தமாகத் தயாரிக்கப் பெற்றது!

சுவைமிகுந்த ஆஞ்சநேயர் பப்படத்துக்கு

ஏகவிநியோகஸ்தர்கள்

லாலா சோப் தொழிற்சாலை

அச்சுவேலி,

(சி/15368)



## வைத்திய சேவை

## ஹோப் கிளினிக் (Hope Clinic)

வாத ரோகமா? சரும ரோகமா? தொய்வு வியாதியா? நீரிழிவா? மலேரியாவா? மாதவிடாய்க்கோளாறுகளா? குழந்தைகளின் வியாதிகளா? மற்றும் உடல் மெலிவு, உடல் பருமன், தலைமுடி உதிர்தல், தலைமுடி நரைத்தல் போன்ற பிரச்சினைகளா? எதுவாயினும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.

டாக்டர் த. சிவானந்தன்,

'ஹோப் கிளினிக்'

216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(84320)


# குண்டுகள் மீட்பு

மறவன் புலவுப் பகுதியில் நேற்று முன்தினம் தேடுதல் நடத்திய படையினர் 60மில்லிமீற்றர் மோட்டார்க் குண்டுகள் பதினாறையும் இரண்டு கிரனேட்டுக்களையும் கைப்பற்றினர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அதே தினம் அவரைக்காடுப் பகுதியில் இராணுவத்தின் பொறியியல் பிரிவினர் டாங்கிகளைத் தகர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிலக்கண்ணிகளை மீட்டனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# தமிழக மீனவர்களை நோக்கி கடற்படையினர் தாக்குதல்

சென்னை, பெப். 18

கடந்த வெள்ளியன்று இலங்கை — இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழக மீனவர் ஒருவர் காயமடைந்தார் என இந்தியத் தகவல்கள் தெரிவித்தன.

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த முருகன் என்பவரே காயமடைந்தவராவார்.

இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 4 இந்தியப் படகுகளை நோக்கி இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் —

இதில் ஒருவர் காயமடைய ஏனையோர் தப்பிவிட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (ம-5-6)

# கிரிக்கெட் இறுதியாட்டம்

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலைகள் மட்டத்தில் நடத்தப்பட்ட 15 வயதுக்குட்பட்டோர் பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ் மத்திய கல்லூரி அணி மோத உள்ளது.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்க முன்னாள் தலைவர் அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம)


## சென். ஜோன்ஸ் கல்லூரி

யாழ்ப்பாணம்

## பழைய மாணவர் சங்க நிர்வாகசபைக் கூட்டம்

மேற்படி சங்க நிர்வாக சபைக் கூட்டம் நாளை (19-02-2001) திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு கல்லூரி ஆசிரியர் கூடத்தில் நடைபெறும்.

நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்,

பழைய மாணவர் சங்கம்

(சி/15370)



## சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக

வருடாந்த

## பொதுக் கூட்டம்-2001

இன்று (18-02-2001) ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற இருந்த மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் 25-02-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை சகல கழக அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

செயலாளர்,

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

17-02-2001 (சி/15271)


## மரண அறிவித்தல்

## சேதுநாதன் காண்டீபன்

முத்திரைச் சந்தி நாயன்மார் வீதியைப் பிறப்பிடமாகவும் 73, மானிப்பாய் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சேதுநாதன் காண்டீபன் நேற்று முன்தினம் (16-02-2001) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேதுநாதன் மற்றும் வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மகனும் சுதர்சன், சுகந்தினி, சாந்தினி, ஜெயந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவானந்தி, விஜயகுமாரி, உதயகுமார், ஜெகசோதி, N. காண்டீபன் ஆகியோரின் மைத்துனரும் விஜீத், கோவர்த், பிரசன்னா, கிருசாந், பிரியலக்சன், தர்சனா ஆகியோரின் மாமனாரும் துசியந்தினி, பிரியந்தினி, விதுர்சன், துசான் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18-02-2001) ஞாயிற்றுக்கிழமை 2-00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சே. வசந்தாதேவி

(தாய்)

க. உதயகுமார்,
9/3 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம். T. P. 2466

(84334)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா அமுதலிங்கம்

கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், சிலாபத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா - அமுதலிங்கம் 15.02.2001 அன்று சிலாபத்தில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பிள்ளையம்மா தம்பதிகளின் புதல்வனும், தவராணியின் அன்புக் கணவரும், அமுதினியின் பாசமிகு தந்தையாரும், சுந்தரலிங்கம், கந்தசாமி, மங்களேஸ்வரி, பத்மாவதி, இந்திரவதனம், வஸந்தா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், பராசக்தி, சாரதாம்பாள் காலஞ்சென்ற சிவலிங்கம், தவராஜா, சுரேந்திரன் (சுவிஸ்), ஆகியோரின் மைத்துனரும், திருமதி சுமதி, சுதாகர் (இத்தாலி), சுகுமார் (லண்டன்), ஆகியோரின் சிறிய தந்தையும், நர்மதா (யா.இ.ம.க.) மயூரி (கனகரத்தினம் ம.ம.வி.) கோபிநாத் (கனகரத்தினம் ம.ம.வி) ஆகியோரின் பெரிய தந்தையும் திருமதி ந.சர்மிலா (ஜேர்மனி), சகிலா (ஆசிரியை கொக்குவில் கலைமகள் பாலர் பாடசாலை), சங்கீதா (ஜேர்மனி), சதீஸ் (கொ.இ.க.), சுபிதா (சுவிஸ்), சுஜீவன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சிலாபத்தில் நேற்று (17.02.2001) சனிக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
(84301)
தகவல்:
தாய், சகோதரர்கள்.

## செல்வன் சிவகுருநாதன் சிவரூபன்

(நீர்வேலி)

இராச வீதி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த செல்வன் சிவகுருநாதன் சிவரூபன் நேற்று (17-02-2001) காலமானார்.

இவர் சிவகுருநாதன் - லட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், சிவகுமார் (ஜேர்மனி), தயாரஞ்சனி (எழுதுநர், யா/போதனா வைத்தியசாலை), பத்மரஞ்சனி (மாணவி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) ஆகியோரின் அருமைச் சகோதரனும், சுந்தரலிங்கம், செல்வரத்தினம், பூபதியம்மா, புஸ்பராணி ஆகியோரின் பெறாமகனும், விஜியலட்சுமி, சிவபாக்கியம் (கனடா), பூபதியம்மா, கந்தசாமி, தவராசா, விஜியரட்ணம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-02-2001) ஞாயிறு காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*இராசவீதி,*
*நீர்வேலி.*
தகவல்:
சி.சிவகுருநாதன்
(84319)
(தகப்பனார்)

## நாகமணி இரத்தினசபாபதி

(ஜேர்மனி)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி இரத்தினசபாபதி 16.02.2001 அன்று ஜேர்மனியில இயற்கை மரணமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற நகுலேஸ்வரியின்(அனுசம்மா) அன்புக் கணவரும், நவமலர் (வேலணை), புனிதவதி (டென்மார்க்), யோகநாதன் (உரிமையாளர், யமுனா நகையகம், யாழ்ப்பாணம் - தற்போது கனடா), மனோரதி (கண்டாவளை), உருத்திராதேவி (ஜேர்மனி), கோரதநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொ.தர்மலிங்கம் (வேலணை), செ.சற்குருநாதன் (டென்மார்க்), யோ.மனோரஞ்சிதம்(கனடா), சி.பேரின்பநாதன் (கண்டாவளை), கணேஸ்(ஜேர்மனி), ஆகியோரின் அன்புமாமனும், நா.மார்க்கண்டு (இரத்தினபுரி), இ.பவளம்(கனடா), நா.சித்திரவடிவேல் (உருத்திரபுரம்), ஆ.மனோன்மணி(மன்னார்), கு.சிவபாக்கியம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் (23.02.2001) வெள்ளிக் கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வேலணை கிழக்கு,*
*வேலணை.*
(84323)
தகவல்:
தர்மலிங்கம் நவமலர்
(மகள்)

## சரவணமுத்து நடராசா

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

கரணவாய் தெற்கைச் சேர்ந்த சீதாலட்சுமியின் அன்புக் கணவர் சரவணமுத்து நடராசா நேற்று (17-02-2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றஜனி, நந்தி மற்றும் ஜெயந்தினி (ஜேர்மனி), றஜனி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ராஜமோகன், யோகானந்தன் ஆகியோரின் மாமனாரும் தனுஷன், ஜீவனி, தர்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, பொன்னையா, சிவப்பிரகாசம், செல்லமுத்து, நல்லம்மா, கதிரவேலு ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-02-2001) ஞாயிறு பகல் 12.00 மணிக்கு அன்னாரின் புகையிரத வீதி மல்லாகத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*புகையிரத நிலைய வீதி,*
*மல்லாகம்.*
தகவல்:
கு.லோகேந்திரன்
(84328)
(பெறாமகன்)

## போல் இம்மானுவேல் அந்தோனிப்பிள்ளை

(கரம்பன் கிழக்கு)

ஓய்வு பெற்ற காட்டுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தரும், 1992 - 1996 வரை வேலணை மேலதிக அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தரும் மற்றும் ஊர்காவற்றுறை ஓய்வூதிய சங்கத்தில் 15 வருடங்கள் செயலாளராகவும் பொருளாளராகவும் கடமையாற்றியவரும் கரம்பனைப் பிறப்பிடமாகவும் நாரந்தனையை (செருக்கன் சந்தி) வசிப்பிடமாகவும் கொண்ட போல் இம்மானுவேல் அந்தோனிப் பிள்ளை அவர்கள் 16-02-2001 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் றூபியின் அன்புக்கணவரும் யோண் மெல்வின்(ஜேர்மனி), காலஞ்சென்ற லூசியா மரியா, மரியகொறற்றி(முல்லைத்தீவு), எழில் சர்வானந்தன்(பிரான்ஸ்), யசிந்தா ராஜினி(கரம்பன்), பிரான்சிஸ் சாந்தினி (முல்லைத்தீவு),ஆ.புஸ்பராணி(வளர்ப்பு மகள்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (18-02-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் கரம்பன் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*செருக்கன் சந்தி,*
*நாரந்தனை.*
தகவல்:
யசிந்தா ராஜினி
(84329)
(மகள்)

## மீன் விலை சரிவு

குருநகர்,பெப்.18

சின்னக்கடை பொதுச் சந்தையில் நேற்றைய தினம் மீன் விலை வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டது.

இறால் கிலோ 120 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

சந்தைக்குப் பெருமளவு மீன் வந்ததனால் பொதுமக்கள் மிகவும் மலிவாக வாங்கிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. (உ-51)

## பாஷையூரில் மீளக்குடியமர்வு

குருநகர், பெப்.18

இடம்பெயர்ந்து வேறிடங்களில் வசித்து வந்த பாஷையூர் மக்கள் இராணுவம் அனுமதி வழங்கியதை அடுத்து தமது வீடுகளுக்குத் திரும்பி மீளக்குடியேறி வருகின்றார்கள்.

பாஷையூர் 4 ஆம் குறுக்கு வீதி, கொய்யாத்தோட்டம் புது வீதி, ஈச்சமோட்டை வீதி ஆகிய இடங்களில உள்ள வீடுகளில் மக்கள் குடியேறி வருகின்ற போதிலும், சேதமடைந்துள்ள இவ்வீதிகளைத் திருத்த யாழ். மாநகரசபை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என இப்பகுதியில் மீளவும் குடியேறியுள்ள மக்கள் தெரிவித்தனர். (உ-51)

## மேன்முறையீட்டு இடமாற்றச் சபைக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,பெப்.18

வலயமட்ட ஆசிரியர்களுக்கான மேன்முறையீட்டு இடமாற்றச் சபையின் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ச.நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் மாகாண கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர். (க-10-ரி)

## பாடநூல் விநியோகம்

தென்மராட்சி,பெப்.18

அண்மையில் கப்பலில் கொண்டு வரப்பட்ட இலவச பாடப் புத்தகங்கள் அந்தந்த வலயக் கல்வி அலுவலகங்களுக்கு நேற்றுமுன்தினம் தொடக்கம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி, வடமராட்சி வலயங்களுக்கான இலவச பாடப் புத்தகங்கள் வாகனங்களில் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் இவை விரைவில் அந்தந்தப் பாடசாலைகளில் அதிபர்கள் ஊடாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-117)

## தந்தையும் மகளும் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணம் - 4ஆம் குறுக்குத் தெரு பகுதியில் நேற்று பிற்பகல் 1 மணியளவில் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளுடன் ஏற்பட்ட விபத்தில் சைக்கிளில் சென்ற தந்தையும் மகளும் படுகாயமடைந்தனர்.

பீச் றோட், குருநகரைச் சேர்ந்த சவிரியான் வில்பிறேற் (வயது 38) அவரது மகளான பிறிஸ்கா (வயது 4)ஆகியோரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-6)

## சைவப்புலவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.18

சிவராத்திரி தினத்தன்று மக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை நிகழ்த்த வசதியாக எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை குடாநாட்டில் இரவு நேர ஊரடங்கை தளர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மகஜர் ஒன்றை மேற்படி சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. (உ-7)


SHAMROCK
ஈச்சமோட்டை வீதி,
GR.4 முதல் O/L வரை
ஆரம்பமாகியுள்ளது
✪ சமூகக்கல்வி
Mr.நித்தியானந்தன,B.A
✪ ஆங்கிலம்
Mr.ஜெயக்குமார், B.A
(C/15369)



இடம் மாற்றம்
கிருஷ்ணபிள்ளை அன் சன்ஸ்
நாச்சிமார் கோயிலடி
591, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடியில் இதுவரை காலமும் இயங்கி வந்த எமது வியாபார நிறுவனம் தற்போது அதன் அருகில் (அரசடிச் சந்தியில்) 615, காங்கேசன்துறை வீதி என்னும் முகவரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கை யாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
கிருஷ்ணபிள்ளை அன் சன்ஸ்
(மோட்டார் சைக்கிள்,சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்)
*615,காங்கேசன்துறை வீதி,*
*அரசடிச்சந்தி, நாச்சிமார் கோயிலடி.*
(84335)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுச்சாமி இராசமணி

பலாலி கிழக்கைச் சேர்ந்த திருமதி பொன்னுச்சாமி இராசமணி அவர்கள் நேற்று (17-02-2001) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் பொன்னுச்சாமியின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, தங்கலிங்கம் (ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்), சந்திரலிங்கம் (காப்புறுதிக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்), யோகலிங்கம் (அரசினர் வைத்தியசாலை கோப்பாய்), கணேசலிங்கம் (தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்), ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரத்தினம், செல்வ ராணி, அம்பிகை, ஜெயகௌரி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் சதீஸ்வரன் கேமமாலினி, சதானந்தன், வாகீசன், அகிலேசன், சயநதன், லிங்கதீபன், நிரோஜன், ரதீபன், கனுஸ்ரிகா ஆகியோரின் பாச மிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-02-2001) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்று பூதவுடல் மயிலங்காடு காடகடம்பை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(கிரியைகள் ஏழாலை தெற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த மகன் தங்கலிங்கத்தின் இல்லத்தில் நடைபெறும்.)

*ஏழாலை தெற்கு,*
*தோப்பு,*
*சுன்னாகம்.*
(84332)
தகவல்:
பொ.கணேசலிங்கம்
(மகன்)

## Dr. நிரஞ்சனா சேனாதிராஜா

(உஷா)

கொக்குவில் பொற்பதியைப் பிறப்பிடமாகவும், **Canada** வை வசிப்பிடமாகவும் கொண்ட **Dr.** நிரஞ்சனா சேனாதிராஜா 15.02.2001 அன்று கனடாவில காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜா - விஜயலக்சுமி(பபா) தம்பதிகளின் மூத்தபுதல்வியும் காலஞ்சென்ற **E.S.S** அருணாசலம், காலஞ்சென்ற மதுரம்மா மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற **V**. சுப்பிரமணியம், செல்லம்மா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ரோஜனா(**Canada**), காஞ்சனா(**U.K**), சோபனா(**London**), தர்மனா(**Canada**), அஞ்சனா(**Colombo**), விஜயசேனா(**Canada**), விஜயராஜ்(**Canada**), விஜயன்(**London**) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குகநேசன், பரமநாதன், சண்முகலிங்கம், பிரேம்குமார், ரவந்திரா, சர்மிலா, சுகிர்தகலா, யசோதா, ஆகியோரின் மைத்துனியும் கஜானன், அஜீவ், மதுசாயினி, சைலா, திவ்ஜன், யாமினி, கிஷேந்திரா, சைலேந்திரா, அஸ்வேத்திரா, ஆர்த்தி, அருண், வாரகி, துசேந், துவாரகா ஆகியோரின் பெரியன்னையும், சிவயோகம் செல்வராஜா, மகாதேவன் புவனேஸ்வரி, வாமதேவன் செல்வதி, பாலச்சந்திரன் ஞானரூபி ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சந்திரவதனி, சிவப்பிரகாசம், மற்றும் சுந்தரகாந்தா, தம்பிராசா, பரிபூரணம், சிவசுப்பிரமணியம், ரங்கநாயகி, லோகேஸ்வரன் ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2001) திங்கட்கிழமை **Canada** விலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*கோணமலை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(84327)
தகவல்:
திரு, திருமதி சு.தம்பிராசா
(மல்லி)

## கந்தையா செல்லத்துரை

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லத்துரை நேற்று (17.02.2001) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக்கணவரும் சிவானந்தபவானி,சதானந்தபவானி(சுவிஸ்), கிருபானந்தசிவம்(கனடா), உருத்திரானந்தசிவம்(கனடா) ஆகியோரின் அருமைத்தந்தையும் சண்முகநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) சிவனேஸ்வரி(கனடா), சாந்தினி(கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2001)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சிவதரிசனம்'*
*கே.கே.எஸ்.றோட்,*
*இணுவில் மேற்கு.*
(84330)
தகவல்:
க.சுப்பிரமணியம்

## செல்வன் குற்றாலன் முரளிதரன்

யாழ். கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வன் குற்றாலன் முரளிதரன் 16.02.2001 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

இவர் குற்றாலன் (சைவத்தார்), விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் அமரர் சுரேந்திரன், கமலேஸ்வரி(நாவலர் மகா வித்தியாலயம்), கிருபாகரன்(வைத்தீஸ்வராக்கல்லூரி), சுகன்யா(வைத்தீஸ்வராக்கல்லூரி), பத்மபிரிய(ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.02.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கன்னாதிட்டி,*
*யாழ்ப்பாணம்.*
(84331)
தகவல்:
சு.குற்றாலன் (சைவத்தார்)
(தகப்பன்)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு கப்பலில் 90 ஒட்சிசன் சிலிண்டர்கள்

## ஒரு மாதத்துக்கே போதுமானவை

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.ஆஸ்பத்திரிக்கு கடந்த வியாழக்கிழமை வந்த செஞ்சிலுவை சர்வதேசக் குழுக் கப்பலில் ஒட்சிசன் சிலிண்டர்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

சுமார் 90 சிலிண்டர்கள் வந்து சேர்ந்துள்ள போதிலும், அவை சுமார் ஒரு மாத காலத்துக்கே போதுமானவை என்று தெரிவிக்கப்பட்டது.

அடுத்து வரும் கப்பல்களில் சிலிண்டர்கள் வந்து சேராத பட்சத்தில் மீண்டும் ஒட்சிசனுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரியில் மீண்டும் ஒட்சிசனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால், அநியாய உயிரிழப்புகள் தவிர்க்க முடியாததாகி விடும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-15)

# புலிகளைத் தடைசெய்யுமாறு ஐ.தே.கவும் வலியுறுத்தவேண்டும்

## மகாநாயக்கர்கள் கோரிக்கை

கொழும்பு,பெப்.18

பிரிட்டனில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதற்காக அரசாங்கமும் சிங்கள அமைப்புகளும் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஐ.தே.கட்சியும், ஜே.வி.பியும் அணி திரண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்ய வேண்டுமெனக் கோரி கொழும்பு மற்றும் ஏனைய இடங்களில் நடத்தப்படும் போராட்டங்களுக்கு பௌத்த பிக்குமார், புத்திஜீவிகள் தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (ம-7)

## தேவாலய மணிகள் ஒலித்தன

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்று மாலை 5 மணிக்கு மணிகளை ஒலிக்கச் செய்து சமாதானத்துக்கான பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

சமாதானத்தை வலியுறுத்தி மடு அன்னையின் திருச்சொரூபம் தென்னிலங்கையில் பவனியாக எடுத்து வரப்படுகின்ற தேசிய நிகழ்வை ஒட்டியே மணிகள் ஒலிக்கப்பட்டன. (ஐ-5)


புதிய விலையில் மெய்கண்டான்

ஆச்சரியப்படும் மலிவுவிலையில் மெய்கண்டான் கலண்டர்கள் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன. கையிருப்பு குறைந்த அளவே உள்ளது.

**பிரதிகளுக்கு முந்துங்கள்!**

**விலை: ரூபா 80 மட்டுமே!**

PAPER HOUSE
300, Hospital Road,
Jaffna.
T.P. 2783

(C/15345)



விற்பனையாகின்றன

1) தமிழ் மூலம் கொம்பியூட்டர் புத்தகங்கள்
2) கொம்பியூட்டர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான- NCCA-PART - I
3) OMOS - SELECTION புத்தகங்கள், டயறிகள், கலண்டர்கள் விற்பனையாகின்றன.

மங்கிலன் புத்தகசாலை

(C/15346) இல. 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



கை கொடுத்தல் நிதி

காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களின் எதிர்கால கல்விக்கு கைகொடுக்கும் திட்டம்.

இந் நிதி சேகரிப்புக்காக

உயிர் விசை
(நாடக ஆற்றுகை)

கைலாசபதி கலையரங்கில்
இன்னும் சில தினங்களில்.

முகாமைத்துவ கற்கைகள்,வணிக பீட மாணவர் ஒன்றியம்.

YASO MORTORS
Dealers is motor cycle , motor cycle spareparts, and hard wares
138, Stanley road Jaffna.
TP:2544


# ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு வியாழனன்று யாழ்.வருகின்றது

கொழும்பு,பெப்.18

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் விசேட தூதுக்குழு எதிர்வரும் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

யாழ்.நிலைமை தொடர்பாக நேரில் அறிந்து கொள்வதற்காகவே இக்குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் கொழும்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

'சார்க்' நாடுகளுடன் பரஸ்பர உறவுகளை மேம்படுத்துவதற்காக தென்னாசிய நாடுகளில் விஜயம் மேற்கொண்டு வரும் இக்குழுவினர் இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வருகின்றனர்.

ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ஜெறாட் கொலின்ஸ் இத் தூதுக் குழுவுக்கு தலைமை வகிக்கின்றார்.

ஐரோப்பிய நாடாளுமன்றப் பிரதிநிதிகள் ஐவர் உட்பட 10 பேர் இக்குழுவில் இடம்பெறுவர்.

இக்குழுவினர் கொழும்பில் அரச தலைவர்களுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இலங்கை நாடாளுமன்றத்தின் குழுக்களுடன் பல கருத்தரங்குகளையும் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## வவுணதீவில் திடீர் படை நடவடிக்கை

மட்டக்களப்பு,பெப்.18

வவுணதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை திடீரெனத் தாக்குதல் நடத்தியவாறு படையினர் கன்னன்குடா பகுதியை நோக்கி முன்னேறிச் சென்றனர்.

படையினருடன் ராசிக் குழுவினரும் இணைந்து இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதிகளில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. (ஐ-5-21)

## பிரிட்டிஷ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் தூதரகம் இந்த மகஜர்களுக்கு மத்தியில் மூழ்கிவிட்டது என்றார் கொழும்பில் உள்ள பத்திரிகையாளர் ஒருவர்.

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நாளை பிரிட்டனில் நடைமுறைக்கு வருகின்றது. எனினும் அச்சட்டத்தின் கீழ் பயங்கரவாத அமைப்புகளாகப் பிரகடனப்படுத்தப்படும் அமைப்புகளின் பட்டியல் உடனடியாக வெளியிடப்பட வேண்டும் என்று அவசியமல்ல" - என பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் ஜக் ஸ்ட்ரோ மூன்று தினங்களுக்கு முன்னர் பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு வெளியான பின்னரும் கூட, தடைக்கு ஆதரவாகவும் எதிராகவும் மேற்கொள்ளப்பட்டு வந்த நெருக்குதல் நடவடிக்கைகளின் தீவிரம் குறையவில்லை என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-உ)

## மகஜரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறை இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் கடும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர் எனவும் கூறப்பட்டது.

இதேவேளை -

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டாம் என்று பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை விடுக்கும் மகஜரில் பொதுமக்களின் கையொப்பம் பெறும் வேட்டையை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து மேற்கொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழக பிரதான வாசலிலும், மருத்துவ பீட வாசலிலும் அமைக்கப்பட்ட கையொப்பம் பெறும் விசேட கருமபீடங்களில் நேற்று ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தாமாகவே முன்வந்து கையொப்பமிட்டதைக் காணமுடிந்தது.

இதேவேளை -

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் பொதுமக்களிடம் சுயவிருப்பத்தின் பேரில் கையொப்பங்களைப் பெற்றனர்.

யாழ்.நகரப் பகுதியில் உள்ள சகல தனியார் கல்வி நிலையங்களுக்கும் சென்று மாணவர்கள் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. (உ-6-7-27-31)


கம்பனி
A/L 2001 DAY CLASS
கணக்கீடு
D.Sam
ஆரம்பம்:- 20.02.2001
காலை 10 மணி
DMI
யாழ்.நகர்
(C/15343)


# கைதிகளும் பிரிட்டனுக்கு கடிதம்

கொழும்பு,பெப்.18

விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டன் தடைசெய்யக்கூடாது என்று கோரும் கடிதம் ஒன்றை களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

தம்மைச் சந்திக்க வந்த சட்டத்தரணிகள் ஊடாக அவர்கள் இந்த கடிதத்தை பிரிட்டிஷ் தூதருக்கு அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## நேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

பேரணியின் இறுதியில் சமாதானத்தை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

வவுனியாவில் காலை 10 மணிக்கு இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான சமாதானப் பேரணி ஹொறவப்பொத்தான வீதி, பஜார்வீதி, கண்டி வீதி ஊடாக வவுனியா செயலகத்தை அடைந்தது.

'போரைநிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்து!', 'யுத்தம் வேண்டாம்; சமாதானமே வேண்டும்!', 'சமாதானத்துக்காக குரல் கொடுப்போம்' என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை பேரணியில் கலந்து கொண்டோர் ஏந்திச் சென்றனர்.

பேரணியின் இறுதியில் ஜனாதிபதிக்கான மகஜர் வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-5-164)

## ஐரோப்பிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கொழும்பில் தங்கியிருக்கும் போது இலங்கையில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் வெளிநாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்த உள்ளனர். அத்துடன் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் சந்திக்க உள்ளனர். (ஐ-5-6)

## திடீர்த்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை சம்பவ இடத்திலிருந்து அப்புறப்படுத்துவது -ஆகியன குறித்து நேற்று ஒத்திகை இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த ஒத்திகையில் இராணுவம் மற்றும் கடற்படையினர், தீயணைப்புப் படையினர், கொழும்பு தேசிய வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

முன்னறிவிப்பு இன்றி திடீரென நடத்தப்பட்ட இந்த ஒத்திகையால் கோட்டைப் பகுதியில் சிலமணி நேரத்திற்கு வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (ம-5)


கருத்தரங்கு இலவசம்
GCE O/L 2001, GRADE 10
அலகு 1 - இயக்கவியல்
21-02-2001, புதன், காலை 8 மணிக்கு
❖ வடபகுதி மாணவமணிகள் யாவரும் பங்குபற்றலாம்
❖ மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இன்றிலிருந்தே பதிவு செய்யுங்கள்
அடிப்படையில் இருந்து விளக்கம்
வடபகுதி மாணவர்களுக்காக மீண்டும் யாழில்
விஞ்ஞானம் குமரன்
DMI யாழ்நகர்
(84109)



இதயத்தின் ஆழத்திலிருந்து.......

மனநலம் மங்கியவர்களின் மறுவாழ்வுக்காக மருத்துவ மாணவர்களால் திரட்டப்பட்ட நிதியத்துக்கு மனமுவந்து உதவிய உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது.

மருத்துவ மாணவர்கள்,
மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

WE SINCERELY THANK ALL OUR BENEFICIARIES WHO HAVE CONTRIBUTED TO THE FUND RAISED BY MEDICAL STUDENTS FOR THE BETTERMENT OF PSYCHIATRIC PATIENTS.

MEDICAL STUDENTS,
FACULTY OF MEDICINE,
UNIVERSITY OF JAFFNA.

விளம்பர அனுசரணை:
'SUNDHARSON''
MANIPAY.
(84276)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.